வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 21.03.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் :102 | பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# கொக்குத்தொடுவாயிலும் தமிழர் நிலம் ஆக்கிரமிப்பு

## எந்த அறிவிப்புமின்றி எல்லைக்கற்கள் நாட்டல்

முல்லைத்தீவு, மார்ச் 21


**தமிழரின் பூர்வீக கிராமமான கொக்குத்தொடு வாயில் பல நூறு ஏக்கர் வயல் நிலங்களை ஆக்கிரமிக்கும் நோக்கில் நில அளவைத் திணைக்களம் எந்த அறிவிப்புமின்றி எல்லைகற்களை நாட்டியுள்ளது என்று அந்தக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.**



கொக்குத் தொடு வாய் - கோட்டைக் கேணியிலி ருந்து, அம்பட்டன் வாய்க் கால், தீமுந்தல், பணம் போட்ட கேணி, நாயடிச்ச முறிப்பு, வெள்ளைக் கல்லடி, சிவந்தா முறிப்பு, சூரியனாறு வரையான தமிழ் மக்களுக்கு சொந்த மான பூர்வீக வயல் நிலங்களிலேயே நில அளவைத் திணை களத்தினர் எல்லைக் கற்களை நாட்டி யுள் ளனர்.

இது தொடர்பாக காணிகளுக்கு உரியவர் களுக்கோ அல்லது கமக்கார அமைப்பின ருக்கோ அறிவித்தல் எதுவும் வழங்கப்பட வில்லை என்றும் தெரிவித்த அப் பகுதி மக்கள், இவ்வாறு 15

# வியாஸ்காந்துக்கு ஐ. பி. எல். வாய்ப்பு




யாழ்ப்பாணம், மார்ச் 21

புகழ்பெற்ற ஐ. பி. எல். இருபது - 20 தொடரில் வலைபந்து பந்துவீச்சா ளராக யாழ்ப்பாணத்தை சேர்ந்த விஜயகாந்த் வியாஸ் காந்துக்கு வாய்ப்பு கிடைத் துள்ளது.

கிரிக்கெட் உலகில் பெரும் கவனம்பெற்ற, ஐ. பி. எல். தொடர் எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. 15

# உணவு பாதுகாப்பின்றி 32 வீதமான குடும்பங்கள்!

கொழும்பு, மார்ச் 21

உலக உணவுத் திட்டத்தின் பெப்ரவரி மாத ஆய்வின்படி, நாட்டில் 32 வீதமான குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் பொருளா தார நெருக்கடியாலேயே இந்த நிலைமை எனறும் ஜனவரியில் பொருட் களின் விலைகள் ஏற்ற இறக்கமாக இருந்தமை கவலை தருவதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

எனினும், அத்தி யாவசிய பொருட் களின் போதுமான 15

# இலங்கைக்கு 300 கோடி டொலர் சர்வதேச நாணய நிதியம் அனுமதி

நியூயோர்க், மார்ச் 21

**புதிய விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் கீழ் இலங்கைக்கு 300 கோடி டொலர்கள் கடன் வழங்க நிறைவேற்று சபை அனுமதி அளித்துள் ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிக்கை வெளியிட்டது.**

நேற்று நள்ளிரவை அண்டி இந்த அறிக்கை வெளியானது. இதன்படி, பொருளாதார நிலைத் தன்மையை மீட்டெடுத் தல், நிதி நிலைத் தன்மையை பாதுகாத்தல் மற்றும் இலங்கையின் வளர்ச்சி திறனை வெளிக்கொண்டு வருதலுக்கான கட்ட மைப்பு - சீர்திருத்தங்களை முடுக்கிவிடும் நோக்கில் இக்கடன் அளிக்கப்படு கிறது. இந்தக் கடன் 48 மாத நீட்டிக்கப்பட்ட ஏற்பாட்டுடன் இன்று (நேற்று) ஒப்புதல் அளிக் கப்பட்டது. இலங்கைக்கு, 33.3 கோடி டொலர் உட னடியாக அளிக்கப்படும். அத்துடன், சக நிறுவனங் களையும் நிதி உதவி அளிக்க ஊக்குவிக்கும் என்றும் தெரிவித்தது.

# 7 பில். டொலர் எமக்கு கிட்டும்

## ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 21

சர்வதேச நாணய நிதியம், சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் பலதரப்பு அமைப்புகளி டமிருந்து 7 பில்லியன் (700 கோடி) அமெரிக்க டொலர்கள் வரையிலான நிதியுதவியை இலங்கை பெறும் வகையில் சர்வதேச 15

# தோல்வியில் முடிந்தது பேச்சு; போராடும் தீர்மானம் நாளை!

## இலங்கை ஆசிரியர் சங்கம்

கொழும்பு, மார்ச் 21

ஆசிரியர்கள் இட மாற்ற சபை கலைக்கப் பட்டமை தொடர்பாக அரசாங்கத்துடன் இலங்கை ஆசிரியர் சங் கம் உள்ளிட்ட தொழில் சங்கங்கள் நடத்திய பேச்சு தோல்வியில் முடிந்தது. இதற்கு 15

# சிறுமி மீது கூட்டு வன்புணர்வு இரு சந்தேக நபர்கள் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 21

15 வயது சிறுமியை மதுபானம் பருக்கி கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட் டுள்ளனர்.

அச்சுவேலியில் மதுபானம் பருக் கப்பட்டு சிறுமி 15

# டொலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு உயரும்!

## ஜனாதிபதி, மத்திய வங்கி நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 21

சர்வதேச நாணய நிதி யத்தின் உதவி செயல்திட் டத்தைப் பெறுவதற்கான இறுதிக்கட்ட இணைக்கப் பாடு எட்டப்பட் டவுடன், அமெ ரிக்க டொலர் 15

## மாணவி வித்தியா கொலை

# கொலையாளிகளின் மேன்முறையீடை விசாரணைக்கு ஏற்றது உயர்நீதிமன்றம்!

கொழும்பு, மார்ச் 21

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக் கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஏழு பிரதி வாதிகள் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுக் களை விசாரணைக்கு எடுக்க உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நீதியரசர்களான பிரிதி பத்மன் சூரசேன, காமினி அமரசேகர மற்றும் அர் ஜுன ஒபேசேகர ஆகி யோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னி லையில் இந்த மேன் முறை யீட்டு மனுக்கள் நேற்று திங்கட்கிழமை விசார ணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டன.

இதன்போது முன்வைக்கப் பட்ட விடயங்களை 15

# இரு அரச நிறுவனங்களை விற்பனை செய்ய அனுமதி!

கொழும்பு, மார்ச் 21

சிறீ லங்கா ரெலி கொம், லங்கா மருத்துவ மனை ஆகியவற்றில் அரசாங்கத்துக்கு இருக் கும் பங்குகளை விற் பனை செய்வதற்கு அமைச்சரவை அங்கீ காரம் வழங்கியுள்ளது.

இதன்படி, திறை சேரி வசமுள்ள சிறீ லங்கா ரெலிகொம் மின் 49.5 வீத பங்கு களும் இலங்கை காப்பு றுதி கூட்டுத்தாபனத் தின் வசமுள்ள லங்கா மருத்துவமனையின் 51.34 வீத பங்குகளும் விற்பனை செய்யப்பட வுள்ளன.

இது தொடர்பாக கொழும்பு, பங்கு சந் தைக்கு இரு நிறுவனங் களின் நிறைவேற்று அதிகாரிகளும் எழுத்து பூர்வ அறிவிப்பை விடுத்துள்ளன. (ஐ)

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

'கோட்டா கோ ஹோம்' போராட்டக்காரர்கள், கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியை மட்டும் வீட்டுக்குப் போகச் சொல்லிக் கேட்கவில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பின்னர் நடந்த பாராளுமன்றத் தேர்தலிலும் தாங்கள் வழங்கிய ஆணையை மீளப் பெற்று புதிய ஆட்சியை அமைக்க வேண்டும் என்றே கோரிக்கை வைத்தார்கள்.

ஆனால், இது ஒரு ஜனநாயக நாடு. அதற்கென்று ஓர் அரசியலமைப்பு இருக்கின்றது. அதனை மீறி எதனையும் செய்யமுடியாது என்று வாதிட்டுக்கொண்டு, அதன் உதவியோடு ஆட்சிக்கு வந்தார் ரணில் விக்கிரமசிங்க.

நாட்டில் உடனடியாக ஒரு தேர்தல் நடந்தால் தமது கட்சி படுதோல்வி அடையும் என்பதைத் தெரிந்துகொண்ட ராஜபக் ஷவின் பொதுஜன பெரமுன, அரசியலமைப்பை துணைக்கு அழைத்துக் கொண்டு, தமது அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்காக ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியது என்னவோ உண்மைதான்.

ஆனால், அன்று இருந்த நிலையில் தேர்தல் நடைபெற்றிருந்தாலும் யார் வெற்றி பெற்றிருந்தாலும் நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்பியிருக்குமா என்பது தெரியவில்லை.

நாட்டைப் பொறுப்பேற்க வாருங்கள் என்று கோட்டாபய முதலில் அழைத்தது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைத் தான். ஆனால், அந்த நெருக்கடியான நேரத்தில் அந்தப் 'பாரத்தை' சுமக்க அவர் தயாராக இருக்கவில்லை. அதுவே அவரை ஒரு பலவீனமான தலைவர் என்று வெளிச்சம் போட்டுக்காட்டியது என்பது வேறு சங்கதி.

'கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிரித்துக்கொண்டு கொடுக்கும் என்று சொல்வதுபோல' ரணிலுக்கு தெய்வம் கூரையைப் பிரித்துக் கொடுத்தது.

அந்த நேரத்தில் அவரை விட்டால் அந்தப் பாரத்தைச் சுமக்க வேறு யாரும் நாட்டில் இல்லை என்றுகூட சொன்னவர்களும் உண்டு.

இன்று நாடு முன்னர் இருந்ததை விட பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டுகொண்டிருக்கின்றது. மீண்டுவிட்டது என்பதல்ல - மீண்டுகொண்டிருக்கின்றது.

ஆளும்கட்சி மக்களின் ஆதரவை இழந்துவிட்டது என்னவோ உண்மை என்றாலும், எதிர்க்கட்சிகளிடையே அவர்களின் ஆதரவு இப்போது என்ன நிலையில் இருக்கின்றது என்பது தெரியவில்லை. பல கருத்துக் கணிப்புகள், ஜே. வி. பியும் ஐக்கிய மக்கள் சக்தியும் அண்ணளவாக ஒரே ஆதரவு தளத்தைக் கொண்டிருப்பதாவே தெரிவித்திருந்தன. உள்ளூராட்சி தேர்தல் நடை பெற்றால், ஜே. வி. பி. முப்பத்தி இரண்டு வீத ஆதரவை பெறும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி முப்பத்தியொரு வீத ஆதரவை பெறும் என்றும் கடைசியாக நடத்தப்பட்ட சுயாதீன கருத்துக் கணிப்புகள் தெரிவித்ததாக கூறப்பட்டது.

இதனால்தான் இந்த இரண்டு கட்சிகளுமே உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தவேண்டும் என்பதில் அக்கறையாக இருக்கின்றன.

தத்தமது ஆதரவுத் தளத்தை அறிய இதனை ஒரு பரீட்சைக் களமாக அவர்கள் பார்க்கின்றனர். அதனால் ஆங்காங்கே ஒவ்வொரு கட்சிகளும் சில உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தை கைப்பற்றலாம். ஆனால், இன்றிருக்கும் உள்ளூராட்சி தேர்தல்முறை அவர்கள் எங்குமே நிலையான ஆட்சியை அமைக்க இடம் தரப்போவதில்லை. கடந்த இரண்டாயிரத்து பதினெட்டாம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் ஐம்பத்தி ஐந்து லட்சம் வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்ற பொதுஜன பெரமுனவே பல சபைகளில் நிலையான ஆட்சியை அமைக்க முடியவில்லை.

இருந்தபோதிலும் உள்ளூராட்சி தேர்தலை நடத்தி பொதுஜன பெரமுனவை தோல்வியடையச் செய்யவேண்டும் என்பதிலேயே எதிர்க்கட்சிகள் குறியாக இருக்கின்றன. அதன் மூலமே அடுத்து வரும் தேர்தல்களில் தாம் சுலபமாக வெற்றி பெறலாம் என்று அவர்கள் கணக்குப்போடலாம்.

இப்போது, அரச தரப்பிலிருந்து அடுத்த ஆண்டு முற்பகுதியில் ஜனாதிபதி தேர்தலை நடத்த ரணில் விக்கிரமசிங்க தயாராகிவிட்டாரென அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மக்கள் ஆணை இல்லாத ஒருவர் ரணில் என்றும் அவர் ஆட்சி செய்வதற்கே அருகதையற்றவர் எனவும் எதிர்க்கட்சியினர் தொடர்ந்து கூறிவந்தனர்.

இப்போது, அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் என்றும் அதுவே இந்த நாட்டில் நடக்கும் முதலாவது தேர்தல் எனவும் அரச தரப்பு கூறுகின்ற போது, அதனை எதிர்க்கட்சிகள் வரவேற்கும் என்று பார்த்தால்.

அப்படி ஜனாதிபதி தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு அவருக்கு அதிகாரம் இல்லை என்கின்றன.

அடுத்த ஆண்டு நவம்பரிலேயே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும். ஆனால், ஜனாதிபதி விரும்பினால் ஓராண்டு முன்னதாகவே நடத்தலாம். அதாவது இந்த ஆண்டு நவம்பருக்குப் பின்னர் எப்போதும் அவர் நடத்தலாம். அவ்வாறு முன்கூட்டியே தேர்தலை நடத்தப்போவதாக ரணில் தரப்பிலிருந்து அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதனையே எதிர்க்கட்சிகள் இப்போது கண்டித்திருக்கின்றன. அதிலும் வேடிக்கை என்னவென்றால், அடுத்து ஒரு தேர்தல் நடந்தால் தாங்களே ஆட்சிக்கு வருவோம் என்று முழக்கமிடும் ஜே. வி. பியும் ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு ரணிலுக்கு அதிகாரம் இல்லை என்கின்றது.

இந்த நாட்டில் முதலில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றால், மூன்று வேட்பாளர்கள் களத்தில் நிற்பது நிச்சயமானது. ரணில், சஜித், அநுரகுமாரவே அவர்கள். மைத்திரி, டலஸ், விமல் அணியிலிருந்தும் ஒருவர் போட்டியிடலாம். அப்படி நால்வர் போட்டியிட்டால் அவர்களில் யார் ஜனாதிபதி பதவிக்குப் பொருத்தமானவர் என்று மக்களிடம் கேட்டால் என்ன சொல்லுவார்கள் என்பது இரகசியமானதல்ல.

அதனால்தானோ என்னவோ முதலில் உள்ளூராட்சி தேர்தல் தான் வேண்டும் என்றும், ஜனாதிபதி தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு ரணிலுக்கு அதிகாரம் இல்லை எனவும் சொல்கிறார்களோ என்னவோ.!

**- ஊர்க்குருவி**

## அரச ஊழியருக்கு வழங்கிய வீடுகள் ஆளின்றி பாழுடைவு

### பொது மக்களுக்கு வழங்கக் கோரிக்கை



முல்லைத்தீவு, மார்ச் 21

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் பனிக்கன்குளம் கிராமத்தில் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு 2012 இல் அரச காணியில் 54 காணித் துண்டுகள் வழங்கப்பட்டு ஒரு இலட்சம் ரூபாய் கடனும் வழங்கப்பட்டு அமைக்கப்பட்ட வீடுகள் எவரும் குடியேறாத நிலையில் பாழடைந்து காணப்படுகின்றது. அத்துடன், இங்கு சமூக சீர்கேடுகளும் இடம்பெற்று வருகின்றன என்று பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலகம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் என்பன உரிய கவனம் செலுத்தி இந்த வீடுகளை வீட்டுத் திட்டம் கிடைக்காதவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் திருமதி ஜெயராணி பரமோதயனை தொடர்பு கொண்டு வினவிய போது,

இந்த வீடுகள் யாருக்கு யாருக்கு வழங்கப்பட்டனவோ அவர்களை குடியேற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது. அவர்கள் குடியேறாத சந்தர்ப்பத்தில் காணியற்ற ஏனைய பொது மக்களுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இருப்பினும் குறித்த நடவடிக்கைகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை -என்றார். (ஐ)

## இறங்குதுறை இடிந்து வீழ்ந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 21

காரைநகர் - ஊர்காவற்றுறை இடையே பயணிகள் கடல் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் படகுகள் கரையொதுங்கும் ஊர்காவற்றுறை இறங்குதுறை இடிந்து வீழ்ந்துள்ளது.



இந்த இறங்குதுறை நீண்டகாலமாக சேதமடைந்திருந்த நிலையில் தம்மிடம் நிதி இல்லையெனக் கூறிய வீதி அபிவிருத்தி அதிகார சபை இதைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை சேதமடைந்துள்ள பாதை படகு திருத்தம் செய்யப்படவுள்ளமையால் சில தினங்கள் பாதை சேவை தடைப்படும் எனக் கூறப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் படகுப் பயணமும் தடைப்பட்டுள்ளமை குறித்து பயணிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

விரைவாக இதை திருத்தம் செய்து தமது சீரானதும் பாதுகாப்பானதுமான போக்குவரத்தை உறுதிப்படுத்துமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## பல்கலைக்கழகங்களின் கல்வி செயல்பாடு முற்றாகப் பாதிப்பு!

### லக்ஷ்மன் யாப்பா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கும் அரசியல் கட்சிகள், குழுக்களின் போராட்டங்கள் மற்றும் தொழில்சங்க நடவடிக்கைகள் காரணமாக பல்கலைக்கழகங்களின் கல்வி செயல்பாடுகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களே அதிகம் பாதிக்கப்படுவதாக முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

மாத்தறையில் நடந்த கூட்டம் ஒன்றில் அவர் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டிருந்த நாடு இன்று ஒப்பீட்டளவில் ஸ்திரமடைந்துள்ளது. இருப்பினும் தொழிற்சங்கங்களால் மேற்கொள்ளப்படும் போராட்டங்கள் மீண்டெழும் நாடு பின்னோக்கி கொண்டு செல்லும் நிலைக்கு தள்ளப்படுகிறது.

இன்றளவில் வெளிநாடுகளில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒதுக்கப்படும் நிதி சுற்றுலாத்துறை மூலம் கிடைக்கப்பெறும் வருமானத்தை விட அதிகமாகும். நாட்டில் தனி யார் பல்கலைக்கழகங்கள் நிறுவதற்கு அனுமதியளிக்கப்படாமையினால் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் மேல் மட்டத்தில் இருப்பவர்கள் தங்களுடைய பிள்ளைகளை வெளிநாட்டு பட்டப்படிப்புகளுக்காக அனுப்பும் போது வறுமைக்கோட்டின் கீழ் காணப்படும் குடும்பங்களின் நிலை மிகவும் கவலை குறியாகியுள்ளது.

இவ்வாறானதொரு கலாசாரத்தை மாற்ற வேண்டும். இதற்கான மாற்று வழிகளை உருவாக்க வேண்டும்- என்றார்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
21.03.2023 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், பங்குனி 07

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இணைந்து செயல்படுதல் என்றால் என்ன?

இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து பயணிப்பதற்கு கட்சியின் மத்திய குழுவில் இணக்கம் தெரிவித்திருப்பதாக தமிழரசு கட்சி தெரிவித்திருக்கின்றது. தமிழ்த் தேசிய அரசியல் சூழலில் ஒற்றுமைபற்றி பேசுவதென்பது நகைச்சுவைக்குரிய ஒன்று. இந்த நகைச்சுவையை அவ்வப்போது தமிழரசு கட்சியின் தலைவராக அறியப்படும் மாவை சேனாதிராசாதான் நினைவுபடுத்துவதுண்டு. இப்போதும், தமிழரசு கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் அவர்தான் இணைந்து பயணிக்கும் யோசனையை முன்வைத்திருக்கின்றார். வழமைபோல் செயல்படுவதற்கு அனைவரும் இணக்கம் தெரிவித்திருகின்றனர். இவ்வாறு இணக்கம் தெரிவித்திருப்பவர்களே தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் ஏனையவர்களைத் தாக்கி பேசுவதற்கான பிள்ளையார் சுழியையும் இடுவர்.

உண்மையில், இணங்கிச் செயல்படுவதென்றால் என்ன? தமிழரசு கட்சியினர் ஏனைய கட்சிகளுடன் இணங்கிச் செயல்படுவதாக அவ்வப்போது கூறிக்கொண்டாலும்கூட அந்த இணக்கத்தைத் தொடர முடியாதவாறு முட்டுக்கட்டைகளை ஏற்படுத்துபவர்களும் அவர்கள்தான். ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து கடிதம் எழுதும் விடயத்தில் ஆரம்பத்தில் உடன்பாட்டை வெளிப்படுத்திய மாவை சேனாதிராசா, பின்னர் அதிலிருந்து நழுவிக் கொண்டார். இறுதியில் ஐந்து கட்சிகள் தனியாகவும் தமிழரசு கட்சி தனியாகவும் கடிதங்களை அனுப்பியிருந்தது. அனைவருமே ஒரு விடயத்தைதான் வலியுறுத்தப் போகின்றனர் என்றால் - அதனை ஏன் அனைவருமாக இணைந்து முன்னெடுக்க முடியாது? இந்த இடத்தில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து பயணிக்கும் முடிவை தமிழரசு கட்சியால் ஏன் கைக்கொள்ள முடியவில்லை?

இதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து செயல்படும் விடயத்திலும் தமிழரசு கட்சியே அவசரப்பட்டு தன்னிச்சையாக முடிவெடுத்து அதனை வெளிப்படுத்தியது. ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயல்படுவதில் கரிசனை உள்ளவர்கள் அவ்வாறானதொரு முடிவை எடுப்பதற்கு முன்னர் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களை அழைத்து கலந்துரையாடியிருக்க வேண்டுமல்லவா! கூட்டமைப்பை எவ்வாறு முன்கொண்டு செல்ல வேண்டும் - அதற்கான தந்திரோபாயங்கள் என்ன? - என்பது தொடர்பில் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சி களுடன் கலந்துரையாடி முடிவெடுத்திருக்க வேண்டும் - ஏனெனில், 2004ஆம் ஆண்டிலிருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சின்னமாக தமிழரசு கட்சியின் சின்னமே பயன்படுத்தப்பட்டது.

மக்கள் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிப்பதன் மூலம் கூட்டமைப்பையே தங்களின் அரசியல் கட்சியாக அங்கீகரித்திருந்தனர். கூட்டமைப்புக்கான ஆதரவின் மூலமே தமிழரசு கட்சி மக்கள் மத்தியில் சாகாமல் இருந்தது. ஏனெனில், மறந்து போய்கிடந்த தமிழரசு கட்சி 2004 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னும் பெயரில் மறுபடியும் மக்களுக்கு அறிமுகமானது. மக்கள், கூட்டமைப்பின் மீதான நம்பிக் கையின் அடிப்படையிலேயே வீட்டு சின்னத்துக்கு வாக்களித்திருந்தனர். ஆனால், தமிழரசு கட்சி ஏனையவர்களுடன் ஆலோசிக்காமலேயே தன்னிச்சையாக வெளியேறும் தீர்மானத்தை மேற்கொண்டது. இணங்கிச் செயல்படுவதில் அக்கறையிருப்பவர்கள் ஒருபோதுமே இவ்வாறு செயல்பட்டிருக்க மாட்டார்கள்.

தொழில்நுட்ப காரணங்களுக்காக - அதாவது, உள்ளூராட்சி தேர்தல் முறைமையிலுள்ள சிக்கல்களை கருத்தில்கொண்டு ஒரு தந்திரோபாய தீர்மானத்தை நாம் கைக்கொள்ள வேண்டுமென்று எண்ணியிருந்தால் அதனை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடியல்லவா மேற்கொண்டிருக்க வேண்டும். எந்தக் கோணத்தில் நோக்கினாலும் இணங்கிச் செயல்பட வேண்டும் என்னும் எண்ணம் தமிழரசுக் கட்சியினர் மத்தியில் காணப்படவில்லை. ஒருவேளை மாவை சேனாதிராசாவிடம் இருந்திருக்கலாம். ஆனால், மாவை சேனாதிராசாவின் குரலுக்கு கட்சிக்குள் முக்கியத்துவம் இல்லை. இப்போதும் மாவையால் முன்வைக்கப்பட்டிருக்கும் இணங்கிச் செயல்படுவதற்கான யோசனை, பின்னர் கருத்தில் கொள்ளப்படும் என்பதற்கு என்ன உத்தரவாதமுண்டு.

# வாரிசு அரசியல் முடிந்து விட்டது; நாமல் வேறு வேலை தேடவேண்டும்!

## விமல் வீரவன்ஸ சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 21

இலங்கையில் வாரிசு அரசியல் முடிந்து விட்டது. நாமல் ராஜபக்ஷ வேறு வேலையை தேடிக்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ.

நேற்று முன்தினம் சுதந்திர மக்கள் முன்னணியின் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும், இன்று நாடு அண்மைக்கால வரலாற்றில் மிக மோசமான நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. அதனால்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'தேர்தலுக்கு பணமில்லை' என்று நெருக்கடியை பயன்படுத்துகிறார். சுதந்திரம் அடைந்ததில் இருந்து தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. ஆனால், 'பணமில்லை' என்ற காரணத்தால் தேர்தல் ஒத்திவைக்கப்படவில்லை.

உள்ளாட்சி தேர்தல் நடக்காது. ஜனாதிபதி தேர்தல் வரப்போகிறது. நிறைவேற்று அதிகாரம் , மாகாண சபை அதிகாரங்கள் , உள்ளூராட்சி அதிகார சபைகளின் அதிகாரம் அனைத்தும் இப்பொழுது ஒருவரிடம். மக்களின் வாக்குகளால் நிராகரிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.க தேசியப் பட்டியலில் இருந்து நியமனம் செய்யப்பட்ட போதிலும் சுமார் ஒரு வருட காலம் பாராளுமன்றத்துக்கு வருவதைத் தவிர்த்து வந்தார். நெருக்கடி அதிகரிக்கும் நேரம் குறித்து ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு முன்னரே புரிதல் இருந்தது என்பது எனது அனுமானம்.

பொருளாதார நெருக்கடி தீவிரமடையும் வேளையில் அவர் பாராளுமன்றத்துக்குள் பதுங்கியிருந்தார். காலிமுகத்திடல் மக்கள் கிளர்ச்சி காரணமாக கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி கதிரையை விட்டு வெளியேறுவதற்கு முன்னர் அவர் பிரதமர் நாற்காலியில் அமர்ந்தார். அங்கிருந்து வெளியேறிய அவர் ஜனாதிபதி நாற்காலியில் அமர்ந்தார்.

தற்போது மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ள நிலையில், மாகாண சபை அதிகாரங்களும் ஜனாதிபதியின் கைகளிலேயே உள்ளன. உள்ளூராட்சி சபைகளின் காலம் முடிந்து, அந்த அதிகாரங்களும் ஜனாதிபதியின் கைகளுக்குச் செல்கின்றன. இந்த நாட்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் இருந்த போதிலும், மாகாண சபைகளின் அதிகாரங்களையும் உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரத்தையும் ஒரே நேரத்தில் வைத்திருக்கும் ஜனாதிபதிகள் இதுவரை இருந்ததில்லை. அவர் தான் 'ஒரே ஒருவன்'. எனவே, இது உருவாக்கப்படும் ஒரு சாதாரண சர்வாதிகாரம் அல்ல. பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி, சர்வாதிகார சக்தியைப் பயன்படுத்தி நம் நாட்டின் எஞ்சியிருக்கும் வாழ்க்கையை அழிக்கத் தயாராகி வருகின்றனர்.

தலைமையின் வழிகாட்டுதல் சரியாக இருந்தால் ஐந்தாண்டுகளில் இந்த நாட்டை உயர்த்த முடியும். அந்த சரியான தலைமைத்துவ வழிகாட்டலை வழங்கவே சுதந்திர மக்கள் கூட்டமைப்பு பிறந்தது.

குடும்பத்தில் இருந்து குடும்பத்துக்கு அதிகாரம் மாற்றப்பட்ட வாரிசு அரசியல் இன்று முடிவுக்கு வந்துள்ளது. அதனால்தான் நாமல் ராஜபக்ஷவிடம் 'வேறொரு வேலையைத் தேடுங்கள்' என்று சொல்கிறோம். அந்த அரசியல் முடிந்தது. ஒரு புதிய சகாப்தம் வருகிறது. நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் அதிகாரம் சாமானியர்களின் கைகளில் இருந்த காலம் அது. அந்த சகாப்தத்தை அன்புடன் ஏற்றுக் கொண்டு எங்களுடன் முன் வருமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றார். (ஐ)

# தாயார் பாலூட்ட மறுத்ததே குழந்தை மரணிக்க காரணம்!

## அரச அதிபர் விளக்கம்


யாழ்ப்பாணம், மார்ச் 21

மனநோயாளியான தாயார் குழந்தைக்கு பாலூட்ட மறுத்ததாலேயே வடமராட்சி கிழக்கில் குழந்தை உயிரிழக்கக் காரணம் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு - குடத்தனையில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆண் குழந்தை ஒன்று போசாக்கு குறைபாட்டால் உயிரிழந்தது. இது தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கையில்,

தாயார் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், குழந்தைக்கு பாலூட்ட மறுத்துள்ளார். அவர் மாதாந்தம் கிளினிக்குக்கு செல்லவும் மறுத்து வந்துள்ளார். குழந்தையின் தந்தை மதுபோதைக்கு அடிமையானவர். குழந்தை உணவூட்டப்படாமலேயே உயிரிழந்தது - என்று கூறினார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மார்ச் - 21 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - பங்குனி 07
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : அமாவாசை




## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். கடன் பிரச்சினை கட்டுக்குள் வரும். கல்யாண முயற்சி கள் பலிதமாகும். வியாபாரத்தில் பழைய வேலை யாட்களை மாற்றுவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**இடபம்**
உங்கள் வேகம் கூடும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத்தொடங்குவார்கள். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். பிரபலங்கள் உதவுவார்கள். சாதிக்கும் நாள்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். வியாபாரத்தில் வேலை யாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் தேடி வரும்.

**கடகம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் சில சமயங்களில் விரக்தியாக பேசுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்துபோகும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். எதிர்பாராத இடத்தி லிருந்து உதவிகள் கிடைக்கும். நன்மைகள் நடக்கும் நாள்.

**கன்னி**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**துலாம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
புதிய கோணத்தில் சிந்தித்து பழைய சிக்கலை தீர்ப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். தாயாரின் உடல்நலம் குணமாகும்.

**தனுசு**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உயரதிகாரிகள் சில நல்ல சூட்சுமங்களை சொல்லித் தருவார்கள்.

**மகரம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடிவடையும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் அதிக முறை முயன்று முடிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் கூடுதல் வேலை வரும். எச்சரிக்கை தேவையான நாள்.

**மீனம்**
குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். வேலைச் சுமை அதிகரிக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

### தமிழக வரவு - செலவு திட்டம்

# ஈழத் தமிழர் வீட்டு திட்டத்துக்கு 1,003 கோடி ரூபாய் ஒதுக்கீடு

*சென்னை, மார்ச் 21*

இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து தமிழ்நாட்டில் தங்கியுள்ளவர்களுக்கு வீடு அமைப்பதற்காக ஆயிரத்து 3 கோடி ரூபாயை (இலங்கை மதிப்பில்) தமிழ்நாடு அரசு ஒதுக்கியுள்ளது.

2023 -24ஆம் நிதியாண்டுக்கான தமிழ்நாட்டின் வரவு - செலவு திட்டத்தை தமிழக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் நேற்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார்.

இதன் முக்கிய விவரங்கள் சில வருமாறு, இலங்கை தமிழர்களுக்கு வீடு வழங்கும் திட்டத்துக்கு 223 கோடி இந்திய ரூபாய் - நம் நாட்டு மதிப்பில் சுமார் ஆயிரத்து 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் திட்டத்தை மறைந்த முதலமைச்சர் அண்ணாதுரை பிறந்தநாளில்



முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இதற்காக ரூ.7000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கோவையில் செம்மொழி பூங்கா இரண்டு கட்டங்களாக அமைக்கப்படும். இதற்காக ரூ.172 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அம்பேத்கரின் படைப்புகள் தமிழில் மொழிப்பெயர்க்கப்படும். அதோடு, நாட்டுப்புற கலைகளை மேம்படுத்தவும், காக்க வும் நாட்டுப்புற கலை பயிற்சி மையங்கள் அமைக்கப்படும். சென்னை சங்கமம் கலை நிகழ்ச்சி 8 நகரங்களில் நடத்தப்படும். (ஐ)

# மகளிருக்கான கொடுப்பனவு நிலுவையையும் வழங்குங்கள்

### பா. ஜ. க. தலைவர் வலியுறுத்து

மகளிருக்கான ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு செப்ரெம்பரில் முதல் தவணை வழங்கப்படும் போது, 28 மாத நிலுவைத் தொகையையும் சேர்த்து வழங்க வேண்டும் என்று பா.ஜ.க மாநில தலைவர் அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில், 2023-24ம் ஆண்டுக்கான மாநில வரவு - செலவு திட்டத்தை நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன்நேற்று தாக்கல் செய்தார். இதில், ஹகுடும்பத்தலைவிகளுக்கு மாதம் ரூ. 1000' திட்டம் வரும் செப்ரெம்பர் மாதம் செயல்பாட்டுக்கு வரும் என்று அறிவித்தார்.

இது குறித்து அண்ணாமலை தனது ருவிற்றர் பக்கத்தில்,

'ஆட்சிக்கு வந்து 2 வருடங்களுக்குப் பிறகு, 'மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்' என்ற தேர்தல் வாக்குறுதி தி.மு.கவுக்கு ஞாபகம் வந்ததில் மகிழ்ச்சி. வரும் செப்ரெம்பர் மாதம் இந்த தொகை வழங்கப்படும்போது, முதல் தவணையில் இதுவரையிலான 28 மாத நிலுவைத் தொகையுடன் சேர்த்து, 29,000 ரூபாயாக வழங்க வேண்டும் என தி. மு. க. அரசை வலியுறுத்துகிறேன். (ஐ)

# மக்களை ஏமாற்றும் வரவு - செலவுத் திட்டம்

### எதிர்க்கட்சி சாடல்

*சென்னை, மார்ச் 21*

தமிழ்நாடு அரசின் வரவு - செலவு திட்டம் ஒட்டுமொத்தமாக மக்களை ஏமாற்றுகிறது என்று கூறியிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவரான எடப்பாடி பழனிசாமி.

தமிழ்நாடு அரசின் வரவு - செலவு திட்டம் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் அ. தி. மு. கவினர் வெளிநடப்பு செய்தனர். இதன்போது அந்தக் கட்சியின் இடைக்கால பொதுச் செயலர் ஊடகங்களிடம் பேசுகையில்,

எதிர்க்கட்சிகளின் குரலை நசுக்க தொடர்ந்து, பொய் வழக்குகள் போடப்படுகின்றன. விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்யாததைக் கண்டித்தும் தமிழகத்தில் பணிபுரியும் வெளி மாநிலத் தொழிலாளிகளுக்கு முழுமையான பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் வெளிநடப்பு செய்திருக்கிறோம்.

சொத்து வரி, மின் கட்டணம், பால் விலை என எல்லா வழியிலும், எல்லா வரியும் உயர்த் தப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே ஒன்றரை இலட்சம் கோடி கடன் வாங்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டு 91,000 கோடி கடன் வாங்கியதாகக் கூறுகிறார்கள்.

இவ்வளவு கடன் வாங்கியும், அறிவிக்கப்பட்ட எந்தத் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை. நீட் தேர்வு விலக்கு குறித்து இரகசியம் வெளியிட்ட அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு நோபல் பரிசு கொடுக்க வேண்டும்.

இந்த ஆட்சியில் சட்டம் -



ஒழுங்கு பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. போதைப் பொருள் பரவலாகியிருக்கிறது. இந்த வரவு - செலவுத் திட்டம் ஒட்டுமொத்தமாக மக்களை ஏமாற்றும் வரவு - செலவு திட்டம் எனத் தெரிவித்தார். (ஐ)

# வடக்கு கடலை இந்திய மீனவருக்கு குத்தகைக்கு வழங்க இடமளியோம்!

## மன்னாரில் எதிர்ப்புப் போராட்டம்

மன்னார், மார்ச் 21

வடக்கு கடல் பகுதியில் வரி அறவீடு செய்து இந்திய மீனவர்களுக்கு வாரத்தில் மூன்று நாட்களுக்கு குத்தகைக்கு வாங்குவது தொடர்பாகவும், இந்திய மீனவர்களின் தொடர்ச்சியாக இலங்கை கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபடுவதைக் கண்டித்து வடக்கு மாகாண மீனவர்கள் ஒன்றிணைந்து எதிர்வரும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்க உள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மன்னாரில் நேற்று திங்கட்கிழமை காலை ஊடக சந்திப்பு இடம்பெற்றது.

இந்த ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்க சமாச செயலாளர் என்.எம். ஆலம் , மன்னார் மாவட்ட கிராமிய சம்மேளனத் தலைவர் ஜஸ்ரின் சொய்சா, மீனவ சமூகம் சார்பாக அன்ரனி சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அவர்கள் தெரிவிக்கையில்- இந்த ஆர்ப்பாட்டத்துக்கு வர்த்தகர்கள் , சிவில் சமூக அமைப்புகள், தனியார் போக்குவரத்துச் சங்கங்கள், விவசாயிகள் என அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டுக் குழு சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

இந்திய மீனவர்களின் வருகையை, இந்திய மீனவர்களுக்கு வரி அறவிட்டு மூன்று தினங்கள் இலங்கை கடற்பரப்பில் தொழில் செய்வதற்கு அனுமதி வழங்குவதை பரிசீலிப்பதாக கடந்த 22- 2- 2023 அன்று பாராளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சரால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மன்னார் மாவட்டம் மற்றும் வட மாகாணம் தழுவிய மீனவர்களும் மீனவ சமாசங்களும் தங்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

அதற்கு அப்பால் இந்த தீர்மான யோசனையை பாராளுமன்றத்தில் உடனடியாக நிராகரித்த குறிப்பாக வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் உரையையும் நாங்கள் வரவேற்கிறோம்.



அதற்கு அப்பால் இந்த விடயத்தை அரசு பரிசீலனை கூட செய்யாமல் உடனடியாக இதனை கைவிடவேண்டும் என்று வலியுறுத்தியும், இலங்கை - இந்திய மீனவர்களின் பேச்சுவார்த்தை கடந்த 2016 இல் எடுத்துக் கொள்ளப்பட்ட நடைமுறைக்கு இணங்க நடைபெற வேண்டும் என்பதை வலியுறுத்தியும் நாளை மறுதினம் இந்த ஆர்ப்பாட்டம் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டு மன்னார் மருத்துவமனையின் பிரதான பாதையூடாக சென்று மன்னார் புதிய பஸ் நிலையத்தில் நிறைவடையவுள்ளது.

இதற்கு அமைவாக வடபகுதியில் இருக்கும் பொது அமைப்புக்கள் , மீனவ சங்கங்கள், ஏனைய சிவில் சமூகங்கள் அனைத்தும் எம்மோடு இணைந்து இந்த விடயத்திற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் இது மீனவர்கள் சார்ந்த பிரச்னைகள் மட்டுமல்ல. வடமாகாணத்தில் வாழ்கின்ற அனைவரின் பிரச்னையாகவும் இருக்கிறது.

எனவே அன்றைய தினம் அனைவரும் முழுமையாக கடல் தொழிலை நிறுத்தி, வர்த்தக நிலையங்களை மூடி ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இதற்கான உத்தியோகபூர்வ கடிதங்களை அந்தந்த அமைப்புகளுக்கும் சங்கங்களுக்கும் நாங்கள் விரைவில் அனுப்ப இருக்கிறோம்-என்றனர். (அ)

# இந்திய முப்படைகளைச் சேர்ந்த 19 அதிகாரிகள் இலங்கை விஜயம்

கொழும்பு, மார்ச் 21

இந்தியாவின் முப்படைகளைச் சேர்ந்த 19 அதிகாரிகள் இலங்கை வந்தடைந்துள்ளனர்.

இந்த குழுவினர் நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த அதிகாரிகள் 46ஆவது உயர் விமானக் கட்டளைப் பாடத்தின் கீழ் ஒரு வாரகால உத்தி சார்ந்த ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வந்துள்ளனர்.

மூன்று சேவைகளில் இருந்தும் மூத்த கட்டளை மற்றும் பணியாளர் நியமனங்களுக்கான பயிற்சியின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் இந்த குழுவில் அடங்கியுள்ளனர்.

இந்த விஜயத்தின்போது, இந்திய அதிகாரிகள் இலங்கை கடற்படை கட்டளை, கடலோர காவல்படை மற்றும் விமானப் படை ஆகியவற்றை பார்வையிட்டு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர்.

இலங்கையுடனான இந்தியாவின் பாதுகாப்பு பங்காளித்துவத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்பாக இந்த விஜயம் அமைவதாக இந்திய ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (அ)

# 355 ஜோடி காலணிகள் திருடியவர் சிக்கினார்

கொழும்பு, மார்ச்

காலணி தொழிற்சாலை ஒன்றில் 9 இலட்சத்து 54 ஆயிரத்து 750 ரூபா பெறுமதியான 355 ஜோடி பெண் காலணிகளை திருடிய நபரை மாதம்பை பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில் குறித்த சம்பவத்தில் மாதம்பை பழைய நகரைச் சேர்ந்த (வயது-49) ஒருவரே கைது செய்யப்பட்டார்.

மாதம்பை பழைய நகரில் உள்ள பெண்களுக்கான காலணிகள் தயாரிக்கும் தொழிற்சாலையில் இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர் இரவில் தொழிற்சாலையின் ஜன்னலை உடைத்து உள்ளே நுழைந்து அங்கிருந்த காலணிகளை திருடிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாதம்பை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில், அந்தப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் குழு விசாரணைகளை மேற்கொண்டதுடன், மறைத்து வைக்கப்பட்டிருந்த பாதணிகளுடன் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

திருடப்பட்ட காலணிகள் பின்னர் விற்பனை செய்யும் நோக்கில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சுற்றுலா சான்றுப்படுத்தலுக்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் விசேட கருத்தமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 21

இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கான நிலைபேறான சுற்றுலா சான்றுப்படுத்தலுக்கான வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கும் விசேட கருத்தமர்வு ஒன்று வடமாகாண சுற்றுலாப் பணியகத்தின் ஒழுங்கமைப்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியொன்றில் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை ஒவ்வொரு மாகாணத்திலும் குறித்த செயற்திட்டத்தை முன்னெடுத்திருந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கு சுற்றுலாத்துறை சார்ந்து நிலைபேறான சர்வதேச சான்றிதழை பெற்றுகொடுப்பதே இந்தக் கருத்தரங்கின் நோக்கமாகும்.



இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் உபாலி ரத்நாயக்க, வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன்,வடமாகாண சுற்றுலாப் பணியக பணிப்பாளர் கிஷோத்குமார் ,வடமாகாண சுற்றுலாப் பணியக உத்தியோகத்தர்கள்,வட மாகாண சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்கள் இதில் கலந்து கொண்டனர். (அ)

# சட்டமா அதிபருக்கு அவகாசம்

கொழும்பு, மார்ச் 21

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சலிந்து மல்ஷிக குணரத்ன எனப்படும் குடு சலிந்துவின் உயிருக்கு பாதுகாப்பு வழங்கக் கோரி அவரது தாயார் தாக்கல் செய்த மனு தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேபனைகளை முன்வைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு கால அவகாசம் வழங்கியுள்ளது.

அதன்படி, இது தொடர்பான மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேபனைகளை ஏப்ரல் 4 ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ. மரிக்கார் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (அ)

# வங்கி அதிகாரியின் ஏ.ரி.எம் அட்டையில் 50 இலட்சம் ரூபா திருடிய பணிப் பெண்!

கொழும்பு, மார்ச் 21

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஓய்வுபெற்ற வங்கி அதிகாரியின் ஏ.டி.எம் அட்டையில் இருந்து சுமார் 50 இலட்சம் ரூபாவை எடுத்த பணிப்பெண் உட்பட மூவரை கைது செய்துள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பணிப்பெண்ணின் மகள் மற்றும் மருமகனும் உள்ளடங்குவதாக பொலிஸார் கூறினர்.

11 வருடங்களாக வீட்டில் பணிப்பெண்ணாகப் பணிபுரிந்த பெண்ணிடம் குறித்த ஓய்வு பெற்ற வங்கி அதிகாரி, நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் இருந்தபோது ஏ.ரி.எம் அட்டை மற்றும் அதன் இரகசிய இலக்கத்தை கொடுத்து சிகிச்சைக்குத் தேவையான பணம் செலவழிக்குமாறு தெரிவித்த நிலையில், அந்த அதிகாரி, குணமடைந்து வீட்டுக்கு வந்த பிறகு இரகசியமாக 50 இலட்சம் ரூபா பணம் எடுக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது.

தனது வங்கிப் புத்தகத்தில் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணம் இருந்ததாகவும், இரண்டு பிள்ளைகளுக்கும் தலா 50 இலட்சம் ரூபாவை கொடுத்து மீதிப் பணத்தை வங்கியில் வைப்பிலிட்டுள்ளதாகவும் முறைப்பாட்டில் வங்கி அதிகாரி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

முறைப்பாட்டின்படி, விசாரணையில், சந்தேக நபர் வங்கி அதிகாரியின் ஏ.ரி.எம் அட்டையில் இருந்து ஆறு மாதங்களாக பணம் எடுப்பது சி.சி.ரி.வி கமராவில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பணிப்பெண்ணிடம் நடத்திய விசாரணையில், ஏ.ரி.எம் அட்டை அவரது மகள் மற்றும் மருமகனிடம் ஒப்படைக்கப்பட்டு, அந்த பணத்தில் தங்க நகைகளை வாங்கியதோடு அவர்களுக்கு வீடு ஒன்றையும் வாடகைக்கு எடுத்தமை சந்தேக நபர்களிடம் நடத்திய விசாரணையில் தெரியவந்ததாக பொலிஸார் கூறினர்.

# நாணய நிதியக் கடனை இழந்தால் 2 வாரங்களுக்குக்கூட நாடு நகராது!

## கூறுகிறார் அமைச்சர் பந்துல



**கொழும்பு, மார்ச் 21**

**எதிர்வரும் 20ஆம் திகதிக்குள் இலங்கை, சர்வதேச நாணய நிதியத்தை ஏற்று கடன் உதவியைப் பெறாவிட்டால் மேலும்இரண்டு வாரங்களுக்குக்கூட நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியாமற்போகும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

களுத்துறை விமானப் படைத் தளத்தில் நேற்றுமுன்தினம் சாரதிகளுக்கான தொழில்நுட்ப நடைமுறை பயிற்சிகளை வழங்கும் நிகழ்ச்சியின்போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடனை அடைக்க முடியாத நாடாக உலகமே வழக்கு தொடரும் நிலைக்கு வந்துள்ளோம். ஒரு ஜனாதிபதி, ஒரு பிரதமர், ஒரு அரசியல்வாதி பொறுப்பேற்க முடியாது.

சுதந்திரத்திற்குப் பிறகு, குறிப்பாக 77 இற்குப் பிறகு, நாம் உலகத்திலிருந்து கடன் வாங்கினோம். அவர்களால் பணம் செலுத்த முடியாத நிலையில், பணம் அச்சிடப்பட்டது. இது தொடர்ந்து செய்யப்பட்டது. எனவே, இதற்கு ஒருவர் பொறுப்பேற்க முடியாது.

அதனால்தான் இந்தப் படுகுழியில் இருந்து வெளிவர உதவுமாறு உலகத்திடம் கேட்டோம். இதற்காக 28 நிறுவனங்கள் விண்ணப்பித்துள்ளன. அதில் இருந்து 20 நாடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டன-என்றார். (அ)

# பூநகரியில் தரையை கடலாக்கி ஒரு கிராமத்தை அழிக்க முயற்சி

## சிறிதரன் எம்.பி குற்றச்சாட்டு

**கிளிநொச்சி, மார்ச் 21**

காலிமுகத்திடலில் கடலை தரையாக்குகியும், பூநகரியில் தரையை கடலாக்கியும் ஒரு கிராமத்தை இல்லாது செய்யப் போகின்றார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் குற்றம் சாட்டியுள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பொன்னாவெளி என்ற கிராமத்தில் இருக்கின்ற மிகப்பெரிய வளமான முருகைக்கற்களை அகழ்ந்தெடுத்து அந்த இடத்தில் ஒரு பாரிய சிமெந்து தொழிற்சாலையை அமைப்பதற்காக ரோக்கியோ சிமெந்து நிறுவனம் முயற்சி எடுப்பதாக அண்மையில் செய்திகள் கிடைத்துள்ளன.

குறிப்பாக கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக அந்த இடத்தில் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார்கள். அப்பொழுது நாங்கள் பல தடவை சென்று அதுபற்றி ஆராய்ந்த பொழுது சரியான விடைகளை சொல்லுவதில்லை.

பெருமளவில் சிங்கள மொழி பேசுபவர்களே குறித்த ஆய்வுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். நடைபெறுவது ஆய்வு மட்டும்தான் என்று அவர்கள் சொல்லியிருந்தார்கள். இது தொடர்பாக அப்போது இருந்த பிரதேச செயலாளர், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுடனும் பேசும்பொழுதும், அங்கு ஆய்வு மாத்திரமே இடம்பெறுவதாகவும், அங்கு எந்தப் பணிகளும் தொடங்கப்படமாட்டாது எனவும் எமக்கு தெரிவிக்கப்பட்டது.



ஆனால் அண்மை நாட்களில் அங்கு பெரிய சிமெந்து தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்காக மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வீடு கட்டித் தருகின்றோம், வீதி போட்டு தருகின்றோம், பல்வேறு உதவிகளைச் செய்கின்றோம் எனக்கூறி ஒரு கும்பல் மக்களிடமிருந்து வெற்றுப் பேப்பர்களில் கடிதங்களை வாங்குகின்றார்கள்.

அவற்றைப் பயன்படுத்தி, இங்கு தொழிற்சாலையைத்தான் மக்கள் கேட்கின்றார்கள் என்ற அடிப்படையில் அக்கடிதங்களை மற்றவர்களுக்கு விநியோகம் செய்கின்றார்கள். அப்பாவிகளாக வறுமையின் விளிம்பிலும், வறுமைக் கோட்டிலும் வாழும் மக்கள் இவ்வாறான விடயங்களுக்கு ஆதரவளிப்பது சாதாரணமானது. அதை நாங்கள் யாரும் நிராகரிக்க முடியாது.

அந்த வறுமையையும், ஏழ்மையையும் பயன்படுத்தி, பணத்தின் ஊடாக அப்பகுதி மக்களை குடிபெயர்க்கும் பாரிய முயற்சியை செய்வது கிளிநொச்சி மண்ணுக்கு மிகப் பெரிய ஆபத்து.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கு ஓர் கடிதத்தை அனுப்பி வைத்திருக்கின்றேன். இதுவரை காலமும் இவ்விடயம் தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் பேசப்படவில்லை. பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் பேசி முடிவு எடுக்கப்படவில்லை.

மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டங்களில் இது தொடர்பில் எமது கருத்துக்களை பிரஸ்தாபித்திருக்கின்றோம். ஆனால் எந்த தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. ஆகையால், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவை கூட்டி, இவ்விடயம் தொடர்பில் முடிவுக்கு வரலாம்.

எனவே, இவ்விடயத்தில் விரைந்து செயற்படுமாறு மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றேன்-என்றார். (அ)

# விசாரணைக்காகச் சென்ற பொலிஸார்மீது தாக்குதல்

**மட்டக்களப்பு, மார்ச் 21**

விசாரணைகளை மேற்கொள்ளச் சென்றபோது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உட்பட இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் படுகாயமடைந்துள்ளனர் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி பகுதியில் நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கணவன்- மனைவிக்கு இடையில் ஏற்பட்ட தகராறு தொடர்பில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளை விசாரிக்கச் சென்ற பொலிஸார் மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தாக்குதல் தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)

# மிகப்பெரிய கொள்ளளவுடைய பாரம் தூக்கி இலங்கை வந்தது



**கொழும்பு, மார்ச்**

இலங்கை கொள்வனவு செய்த மிகப்பெரிய கொள்ளளவு கொண்ட பாரம் தூக்கி இயந்திரம் அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தில் கடந்த வாரம் இறக்கப்பட்டுள்ளது.

750 தொன் தூக்கும் திறன் கொண்ட இந்த கிரேன், முதலில் மன்னாரில் காற்றாலை மின் திட்டத்துக்கு பயன்படுத்தப் படும்.

ஜேர்மனில் நிர்மாணிக்கப்பட்ட இந்த பாரம் தூக்கி ஜப்பானில் பயன்படுத்தப்பட்டு, தற்போது இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

1000 தொன் உதிரிப்பாகங்களைக் கொண்ட இந்த பாரந்தூக்கி இயந்திரம் ஒரே நாளில் தரைக்கு இறக்கப்பட்டதாவும், அவை 42 பாரவூர்தி களுக்கு மாற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர், அவை இரண்டு நாட்களில் தரை வழியாக மன்னாரில் உள்ள காற்றாலை செயற்றிட்ட பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டதாக கூறப்பட்டது. (அ)

# மக்களின் ஆதரவு திசைக்காட்டிக்கே!

**கொழும்பு, மார்ச் 21**

திசைக்காட்டிக்கே பொது மக்களின் ஆதரவு முழுமையாக கிடைத்துள்ளது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹோமாகம பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் பங்கேற்று உரையாற்றும் போதே அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் ஆளும் தரப்பினருக்கு அரசாங்கத்தின் பலம் காணப்பட்டாலும் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் பலமே போதுமானது எனவும் அவர் கூறினார். (அ)

# நீல் பண்டார ஹப்புஹின்ன ஜனாதிபதி செயலகத்துக்கு!



**கொழும்பு, மார்ச் 21**

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹப்புஹின்ன அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டு ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து அவரிடம் வினவியபோது, நேற்றுக் காலை விடுக்கப்பட்ட அழைப்பின் பிரகாரம் தான் ஜனாதிபதி அலுவலகத்துக்கு சென்றதாக குறிப்பிட்டார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான கட்டுப்பணத்தை ஏற்கக் கூடாது என பொது நிர்வாக அமைச்சின் செயலாளராக இருந்தபோது மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் அவர் குறித்து பரபரப்பாக பேசப்பட்டது.

பின்னர், நீல் பண்டார ஹப்புஹின்னவும் இந்த விடயம் தொடர்பில் விசாரிக்க தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டார்.

அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் இது தொடர்பான கடிதத்தை மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்ததாக அவர் அங்கு தெரிவித்ததுடன், அக்கடிதத்தை மீளவும் பெற்று மன்னிப்பு கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு



# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் விரைவில் பாராளுமன்றுக்கு!

## நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தகவல்



கொழும்பு, மார்ச் 21

**பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை வர்த்தமானியில் வெளியிட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**

புதிய சட்டம் உத்தியோக பூர்வ மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு ஏப்ரல் தொடக்கத்தில் வர்த்தமானியாக வெளியிடப்படும் என்றும் அதன் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

சந்தேக நபர்களை தன்னிச்சையாக காவலில் வைப்பதற்காக பயங்கரவாத தடைச் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக கடந்த மூன்று தசாப்தங்களாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

கடந்த சில வருடங்களாக, பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றியமைப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் இலங்கை உறுதியளித்துள்ளது.

வலுவான இராஜதந்திர அழுத்தத்தைத் தொடர்ந்து, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை கடந்த ஆண்டு மீளாய்வு செய்த அரசாங்கம், பல வருடங்களாக சிறையில் இருந்தவர்களையும் விடுவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இந்தாண்டு 1,600 இலங்கையர்கள் வேலைக்காக தென்கொரியாவுக்கு

கொழும்பு, மார்ச் 21

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தென் கொரியாவில் கடந்த 3 மாதங்களாக 1,678 இலங்கையர்களை வேலை வாய்ப்புக்காக அனுப்பியுள்ளது.

தென் கொரியாவில் இந்த வருடம் 6,500 இலங்கையர்களை வேலைக்காக அனுப்ப வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் திட்டமிட்டுள்ளது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் கடமைகளை பேறுபெற்ற நிலையில், தென்கொரியாவில் இலங்கையர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அமைச்சின் கூற்றுப்படி, கொரிய வேலைகளுக்கு ஆட்களை அனுப்புவது மந்த நிலையில் இருந்தது, அமைச்சர் நாணயக்காரவின் தலையீட்டால் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

அமைச்சரின் நேரடித் தலையீட்டால் வாரத்திற்கு பல குழுக்கள் தென் கொரியாவிற்கு வேலைக்காக செல்வதாக பணியகம் தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக, இந்தாண்டு ஜனவரி மாதம் முதல் 1678 இலங்கையர்களை தென் கொரியாவில் பணிபுரிய பணியகம் அனுப்பியுள்ளது. அவர்களில் 1398 பேர் தென் கொரியாவில் முதல் முறையாக வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளனர், மேலும் 280 பேர் தங்கள் பதவிக்காலம் முடிந்து மீண்டும் அதே இடத்தில் வேலைக்குச் சென்றுள்ளனர்.இதில் 1,490 பேர் உற்பத்தித் துறையில் பணிபுரிந்து வெளியேறியுள்ளனர், 188 பேர். மீன்பிடித் துறையில் வேலைக்கான சென்றுள்ளனர். இந்தக் குழுவில் 1,662 ஆண் தொழிலாளர்கள் மற்றும் 16 பெண் தொழிலாளர்கள் உள்ளனர். (அ)

# தேசபந்து தென்னக்கோனுக்கு எதிரான வழக்குக்கு இடைக்காலத் தடை நீடிப்பு!

கொழும்பு, மார்ச் 21

பிரதி பொலிஸ் மா அதிபர் தென்னகோனுக்கு எதிராக கோட்டை நீதவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கை நிறுத்தி வைப்பதற்கான இடைக்கால உத்தரவை மார்ச் 28 ஆம் திகதி வரை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று மேலும் நீடித்தது.

தமக்கு எதிரான நீதவான் விசாரணை மற்றும் அழைப்பாணை விடுக்கப்பட்டதை சவாலுக்குட்படுத்தி சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தென்னக்கோன் தாக்கல் செய்த ரிட் மனுவிற்கு அமைய, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் எம்.ஏ.ஆர். மரிக்கார் ஆகியோர் அடங்கிய இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

மேல்மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு கொழும்பு கோட்டை நீதவான் வழங்கிய அழைப்பாணையை இடைநிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்த உத்தரவின் பிரகாரம், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தென்னக்கோனை கூண்டில் நிற்க வைப்பது உள்ளிட்ட நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்வதில் இருந்து நீதவான் தடுக்கப்பட்டுள்ளார்.

ஜூலை 9 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகைக்குள் போராட்டக்காரர்களால் 17.8 மில்லியன் மீட்கப்பட்ட விவகாரத்தில், தேசபந்து தென்னக்கோனை நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியிருந்தது.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 136(1) (அ) பிரிவின் விதிகளின்படி செயற்பாட்டாளர் மஹிந்த ஜயசிங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். (அ)

# முட்டைக்கு தட்டுப்பாடு?

கொழும்பு, மார்ச் 21

தற்போது நாட்டில் முட்டை தேவையில் 30 வீதமே உற்பத்தி செய்யப்படுவதாக அகில இலங்கை கோழி வியாபார சங்கம் தெரிவித்துள்ளது.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சங்கத்தின் சிரேஷ்ட ஆலோசகர் மாதலி ஜயசேகர இதனை தெரிவித்தார்.

இதேவேளை, அடுத்த வாரத்தின் பின்னர் முட்டையின் விலை குறைவடையும் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்தார்.

பெரிய அளவில் முட்டை உற்பத்தியாளர்கள் முட்டைகளை கையிருப்பில் வைத்திருப்பதால், தற்போது சந்தையில் முட்டை தட்டுப்பாடு நிலவுவதாகவும், மக்கள் முட்டை உற்பத்தியாளர்களிடம் இருந்து முட்டைகளை வாங்கி சேமித்து வைப்பதாகவும் அவர் கூறினார். (அ)

# மார்ச் 30 முதல் முதலாம் தர வகுப்புகளில் ஆங்கிலம் பேசும் முறை ஆரம்பிக்கப்படும்

கொழும்பு, மார்ச் 201

எதிர்வரும் மார்ச் மாதம் 30 ஆம் திகதி முதலாம் தரத்தின் அனைத்து வகுப்புக்களிலும் ஆங்கிலம் பேசும் முறை ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அத்தோடு, எதிர்வரும் காலங்களில் 6-9 மற்றும் 10-13 வரையிலான அனைத்து பாடசாலை பாடத்திட்டங்களையும் சர்வதேச மட்டத்துக்கு கொண்டு வர தேவையான மேம்படுத்தல் கள் செய்யப்பட்டு அடுத்த மாதம் முன்னோடித் திட்டம் தொடங்கப்படும் என்று அமைச்சர் கூறினார்.

தகவல் தொழில்நுட்பத்துடன் செயற்கை நுண்ணறிவு பாடத்தையும் கற்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அதற்கான பாட வளங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

# விளையாட்டுப் பணிப்பாளர் பதவி நீக்கம்!



கொழும்பு, மார்ச் 21

விளையாட்டுப் பணிப்பாளர் நாயகம் பதவியிலிருந்து தாம் நீக்கப்பட்டுளார் என தற்போதைய விளையாட்டுப் பணிப்பாளர் நாயகம் அமல் எதிரிசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சுக்கு அறிவிக்கவுள்ளதாக அவர் கூறினார்.

தற்போதைய விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்தை நீக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பேராதனை பல்கலை வளாகத்தில் கட்டித்தழுவுவதற்கு தடை இல்லை

## கூறுகின்றார் துணைவேந்தர்

கொழும்பு, மார்ச் 21

பேராதனைப் பல்கலைக் கழக வளாகத்தில் காதல் செய்வதும் கட்டித்தழுவுவது தடை செய்யப்பட்டதல்ல, ஆனால் அளவுக்கு மீறிய செயற்பாடுகள் அனுமதிக்கப்படமாட்டாது என பேராதனை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர். டி.எம். லமாவன்ச வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் பேராதனை பல்கலைக்கழகத்தின் செனட் கட்டடத்துக்கு அருகில் காதலர்கள் இருவர் கட்டித்தழுவிய படி நின்றிருந்த சம்பவம் குறித்து பல்கலைக்கழக நிர்வாகத்தின் நடவடிக்கை குறித்து சமூக ஊடகங்களில் விமர்சனங்கள் எழுந்தமையைத் தொடர்ந்தும் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - பல்கலைக்கழக வளாகத்தில் 1700 ஏக்கர் நிலப்பரப்பில் 13,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை எந்த வகையிலும் கட்டுப்படுத்தப் போவதில்லை.

எமது நோக்கம் மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் நிலைநிறுத்துவதும் அவர்களின் மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவதும் ஆகும்.

கோவிட் 19 தொற்றுநோய் மற்றும் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் போராட்டங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட விளைவுகளில் மாணவர்களும் விரிவுரையாளர்களும் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதைக் கருத்தில் கொண்டு, நல்ல மனநிலையுடன் இணக்கமான குழுவாக பணியாற்ற அவர்களை அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக வளாகத்தில் கட்டித்தழுவுவது தடை செய்யப்படவில்லை, எனினும் பல்கலைக்கழகத்துக்கு பார்வையாளர்களாக வருகை தரும், மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் கல்விச் சுற்றுலா வரும் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்டவர்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தாதவாறு பல்கலைக்கழக மாணவர்கள் தங்களின் வரம்புகளை அறிந்து செயற்படவேண்டும் - என்றார். (அ)

# அரை சொகுசு பஸ் சேவை அடுத்த மாதம் முதல் ரத்து

கொழும்பு, மார்ச் 21

அடுத்த மாதம் முதல் அரை சொகுசு பஸ் சேவைகள் முற்றாக நிறுத்தப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ்களுக்கும் வழக்கமான பஸ்களுக்கும் வித்தியாசம் இல்லை என்பதை அவதானித்ததால் சம்பந்தப்பட்ட பஸ் சேவை இரத்து செய்யப்பட்டுள்ளது.

எனினும் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# அரசியல் சர்ச்சையை கிளப்பியுள்ள அண்ணாமலையின் பேச்சு!

பாரதீய ஜனதா கட்சியின் தமிழக மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் அதிமுகவுடனான கூட்டணி தொடர்பாக அக் கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணா மலை பேசியதாகப் பரவி வரும் தகவல் இரு கட்சிகளிடையே மீண்டும் வார்த்தை மோதலை உருவாக்கியது.

இதைத் தொடர்ந்து தற்போது அண்ணாமலை அதுகுறித்து செய்தியாளர்களிடையே விளக்கம் அளித்துள்ளார்.

அதில், 'நான் யாருக்கும் எதிரி அல்ல. கூட்டணி குறித்து அதிகாரப்பூர்வமாக அறிவிக்க எனக்கு அதிகாரம் இல்லை. நான் காவல்துறையில் சம்பாதித்த பணம் அனைத்தும் அரவக்குறிச்சி தேர்தலில் செலவாகிவிட்டது. தேர்தலுக்குப் பிறகு நான் கடனாளியாகத்தான் இருக்கிறேன்.

பணம் இல்லாத அரசியலை முன்னெடுக்க வேண்டும். இல்லை எனில், தமிழ்நாட்டில் மாற்றம் ஏற்படாது. இனி வரும் காலத்தில் நான் ஆக்ரோஷமாக பேசப் போகிறேன்," என்று தெரிவித்துள்ளார்.




**என்ன நடந்தது?**

பாஜக மாநில நிர்வாகிகள் கூட்டம் சென்னை அமைந்தகரையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில், பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, தேசிய மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன், பாஜக மாநில துணைத் தலைவர் வி.பி. துரைசாமி உட்பட முக்கிய நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், 'திராவிட கட்சிகளுடன் இணைந்து எந்தத் தேர்தலையும் சந்திக்க பாஜக விரும்பவில்லை. அதிமுகவுடன் கூட்டணி அமைப்பது என்று பாஜக மேலிடம் முடிவெடுத்தால் கட்சிப் பதவியை ராஜினாமா செய்துவிடுவேன்" என்று அண்ணாமலை பேசியதாகத் தகவல் பரவியது.

பாஜக முக்கிய நிர்வாகிகள் சிலர் அக் கட்சியில் இருந்து விலகி அதிமுகவில் இணைந்தது, இதைத் தொடர்ந்து இரு கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பேசிய பேச்சுகள் காரணமாக அதிமுக - பாஜக கூட்டணியில் குழப்பம் நிலவி வந்த நிலையில், அதிமுக - பாஜக கூட்டணி குறித்து அண்ணாமலை பேசியதாகப் பரவும் தகவல் தமிழ்நாடு அரசியலில் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

அண்ணாமலை கூறியதாகப் பரவும் தகவலின் உண்மைத் தன்மையை அறிய பாஜக செய்தித் தொடர்பாளர் நாராயணன் திருப்பதியை தொடர்புகொண்டு பேசினோம்.

அப்போது, "நடந்தது மாநில நிர்வாகிகள் கூட்டம். அதில், கட்சியின் முக்கியமான விஷயங்கள் குறித்து ஆலோசனை செய்தோம். அதில் பேசியதை எப்படி வெளியே கூற முடியும்?

ஒரு பிரச்னையை கிளப்ப வேண்டும் என்பதற்காகப் பரப்பப்பட்ட செய்தி இது. நிர்வாகிகள் மட்டத்தில் பேசப்பட்டதாகக் கூறப்படும் ஒரு தகவல் உண்மையா இல்லையா என்பதை ஏன் வெளியே சொல்லவேண்டும்?" என்று கேட்டார்.

இந்நிலையில், பதவி விலகுவதாக அண்ணாமலை கூறியது அவரது தனிப்பட்ட கருத்து என நெல்லையில் பாஜக சட்டமன்றக் குழு தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

நெல்லை பாளையங்கோட்டையில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் பங்கேற்ற நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், "பாரதிய ஜனதா கட்சியின் கூட்டணி குறித்து அகில இந்திய தலைமைதான் முடிவு எடுக்கும், அதுதான் எங்களது முடிவு. அண்ணாமலை தெரிவித்தது அவரது தனிப்பட்ட கருத்து," என்று தெரிவித்தார்.

**எதிர்வினையாற்றிய அதிமுக**

அதிமுக தென் சென்னை வடக்கு கிழக்கு மாவட்ட செயலாளர் ஆதி ராஜாராம் சனிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது, அதிமுகவுடன் பாஜக கூட்டணி வைத்தால் மாநில தலைவர் பதவியை ராஜினாமா செய்துவிடுவேன் என்று அண்ணாமலை பேசியதாகக் கூறப்படுவது தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த ஆதிராஜாராம், "ரொம்ப சந்தோஷம். யார் இருந்தால் என்ன, யார் இல்லையென்றால் என்ன! சமூகமாக, நல்லிணக்கமாக அரசியல் கட்சிகள் இருந்த நிலையை மாற்றி சொந்தக் கட்சிக்காரர்களையே கொச்சைப்படுத்திய நிலை பாஜகவில் இந்தக் காலத்தில்தான் உருவாகியுள்ளது. ஆகவே, அவர் எடுக்கும் எந்த முடிவும் நல்ல முடிவுதான். நாங்கள் வரவேற்கிறோம், விடை கொடுக்கிறோம்," என்று கூறினார்.

இதேபோல் அதிமுகவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்களிடம் பேசும்போது, "பொதுவெளியில் பேசும் கருத்து குறித்து பதில் சொல்லலாம். ஆனால், கட்சி நிர்வாகிகளிடம் பேசியது தொடர்பாகக் கருத்து கூறுவது உசிதமாக இருக்காது.

கட்சியை வளர்ப்பதற்கு ஆயிரம் பேசலாம். அதுகுறித்து எதுவும் பேசுவது சரியாக இருக்காது. எதுவாக இருந்தாலும் சரி, கட்சிதான் முடிவு செய்யும். அதிமுக தலைமையை ஏற்றுக்கொண்டு வரும் கட்சியோடுதான் கூட்டணி. எங்களுக்கு என்று தனித்தன்மை உள்ளது. குட்டக் குட்ட குனியும் கட்சி அதிமுக அல்ல," என்று கூறியிருந்தார்.

இந்த விவகாரம் முழுக்க முழுக்க நாடகம் என்று கூறுகிறார் மூத்த பத்திரிக்கையாளர் ப்ரியன். அவர், " ஈரோடு கிழக்கு



தேர்தலில் கிடைத்த தோல்வி என்பது அண்ணாமலை, எடப்பாடி பழனிசாமி ஆகியோருக்குச் சேர்ந்து கிடைத்த தோல்வி.

அதை திசைதிருப்ப இவ்வாறு நாடகமாடுகின்றனர். இதேபோல், அண்மையில் யூ டியூபர்கள் சிலர் தொடர்பாக வெளியான ஸ்டிங்க் ஆப்ரேஷன் வீடியோவிலும் அண்ணாமலை பெயர் அடிபடுகிறது.

இதை திசைத் திருப்பவே புதிதாக இந்த விவகாரத்தை கிளப்பிவிட்டுள்ளனர். கூட்டணி குறித்து முடிவும் செய்யும் அதிகாரம் அண்ணாமலைக்குக் கிடையாது. இதுகுறித்து அந்தக் கூட்டத்திலேயே வானதி சீனிவாசனும் பேசியுள்ளார்," என்றார்.

"தமிழ்நாட்டில் பாஜகவை வளர்க்கிறாரோ இல்லையோ தன்னை வளர்த்துக்கொள்வதில் அண்ணாமலை கவனமாக இருக்கிறார்" என்று தெரிவித்த ப்ரியன், "எடப்பாடி பழனிசாமி என்றாவது மத்திய அரசுக்கு எதிராகப் பேசியுள்ளாரா?

எடப்பாடி பழனிசாமியும் அண்ணாமலையும் ஒற்றுமையாகத்தான் இருக்கின்றனர். அதிமுக- பாஜக கூட்டணியைப் பிரிக்க முடியாது. இரு கட்சிகளுமே நகமும் சதையுமாக உள்ளன," என்றும் குறிப்பிட்டார்.

**அதிமுக பாஜக கருத்து மோதலின் பின்னணி என்ன?**

பாஜக தகவல் தொழில்நுட்ப அணியைச் சேர்ந்த சிடிஆர் நிர்மல்குமார் சில வாரங்களுக்கு முன்பாக அக்கட்சியில் இருந்து விலகி அதிமுகவில் இணைந்தார். பாஜகவின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை மீதும் கடுமையான விமர்சனங்களை அவர் வைத்திருந்தார். அதை தொடர்ந்து பாஜக ஐ.டி. விங்கைச் சேர்ந்த பலரும் அதிமுகவில் இணைந்தனர். நிர்மல்குமாரை அதிமுகவில் சேர்த்துக் கொண்டதற்காக சில இடங்களில் எடப்பாடி பழனிசாமியை விமர்சித்து பதாகைகளை வைத்திருந்த பா.ஜ.கவினர், அவரது உருவப் படங்களை எரித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அமர்பிரசாத் ரெட்டி, கருப்பு முருகானந்தம் போன்ற பாஜக நிர்வாகிகள் பலரும் சமூக வலைதளங்களில் தங்கள் அதிருப்தியை பகிர்ந்து கொண்டனர். அண்ணாமலையும் கூட அதிமுகவை விமர்சிக்க தயங்கவில்லை. 'பாஜகவிலிருந்து ஆட்களை கூட்டிச் சென்றால்தான் திராவிட கட்சிகள் வளரும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இது தமிழ்நாட்டில் பா.ஜ.கவின் வளர்ச்சியைக் காட்டுகிறது" என்று குறிப்பிட்ட அவர், இந்த செயலுக்கு எதிர்வினை இருக்கும் என்று எச்சரித்தார்.

இதேபோல், அதிமுகவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்களும் இந்த விவகாரத்தில் பாஜகவுக்கு எதிராக கருத்துகளை தெரிவித்தனர். தமிழ்நாட்டில் பாஜகவை அண்ணாமலை காலி செய்து விடுவார் என்று முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜூ விமர்சித்திருந்தார்.

இதேபோல் ஜெயலலிதாவோடு தன்னை ஒப்பிட்டு அண்ணாமலை பேசியதற்கு கண்டனம் தெரிவித்திருந்த ஜெயக்குமார், செஞ்சிக்கோட்டையில் ஏறியவர்கள் எல்லாம் ராஜா தேசிங்கு கிடையாது. மீசை வைத்தவர்கள் எல்லாம் கட்டபொம்மனும் கிடையாது. நீங்கள் எப்படி வேண்டுமானாலும் இதை புரிந்து கொள்ளலாம் என்று கூறியிருந்தார்.

இரு கட்சியைச் சேர்ந்தவர்களும் இந்த விவகாரத்தில் தீவிரமாக எதிர்வினையாற்றினர். இந்நிலையில், மார்ச் 9ஆம் தேதி நடைபெற்ற அதிமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டத்துக்கு பின்னர் செய்தியாளர்களை சந்தித்த முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், பாஜக ஐ.டி.விங்கை சேர்ந்த பக்குவப்படாத சிலர் ஒருசில கருத்துகளை தெரிவித்தனர். அதற்கு நாங்களும் பதில் அளித்துவிட்டோம். மற்றபடி கூட்டணி தொடர்கிறது. அகில இந்திய அளவில் தேசிய ஜனநாயக கூட்டணியும், தமிழ்நாட்டை பொருத்தவரை அதிமுக தலைமையிலான கூட்டணியும் தொடர்கிறது என்று கூறினார். இதையடுத்து இந்த விவகாரம் தணிந்த நிலையில், தற்போது மீண்டும் அரசியலில் சூட்டை கிளப்பியுள்ளது அண்ணாமலை பேசியதாக கூறப்படும் கருத்து.



# புதிய ஆணையைப் பெறுவது தவிர்க்கமுடியாத தேவை



கலாநிதி ஜெகான் பெரேரா

பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள் தற்போதைக்கு பயனளிக்கும் அறிகுறிளைக் காட்டுகின்றன. நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்படும் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கிடைக்கவிருக்கின்றது. இது தற்போதைய பொருளாதார இடர்பாடுகளை சமாளிக்க வேறு கடன்களை பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கத்துக்கு உதவும். பழைய கடன்களையும் புதிய கடன்களையும் திருப்பிச்செலுத்தக்கூடியதாக இருக்கும் என்பதை உறுதிசெய்வதே சவாலாக அமையும். இதற்காக அரசாங்கம் அதன் புதிய வரிக்கொள்கையை நடைமுறைப்படுத்தத் தொடங்கியிருக்கின்றது.

இந்த கொள்கை வரிகள் இல்லாமலேயே விலைவாசி உயர்வின் காரணமாக ஏற்கெனவே வாழ்க்கையைச் சமாளிக்கமுடியாமல் இருந்த வருவாயை சம்பாதிப்போருக்கு கணிசமான வரிச்சுமயை அதிகரிக்கிறது. அரசாங்க சேவையாளர்களிலும் நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களிலும் குறைப்புச்செய்வதற்கான அதன் திட்டங்கள் குறித்தும் அரசாங்கம் அறிகுறிகளைக் காட்டுகின்றது. இவை பட்ஜெட்டை சமநிலைப்படுத்துவதற்கு அவசியமான சீர்திருத்தங்களாக இருக்கலாம், ஆனால் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து அரசாங்கத்துக்கு இவை ஆதரவைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய சாத்தியமில்லை. சனத்தொகையில் 40 சதவீதமானோர் தினமும் 225 ரூபாவையும் விட குறைவான பணத்துடன் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கும் நிலையில் பலர் வறுமைக்கோட்டின் கீழ் விழக்கூடிய ஆபத்து இருப்பதாக உலகவங்கி எச்சரிக்கை செய்திருக்கிறது.

பொருளாதாரத்தை நிலையுறுதிப்படுத்துவதற்கு தேவைப்படும் பொருளாதாரக் கொள்கைகள் மக்களின் வரவேற்பைப் பெறக்கூடியவையாக இல்லை என்பதே அரசாங்கத்தின் பிரசசினையாகும். அந்த கொள்கைகள் அரசியல் ரீதியிலும் சிக்கலானவையாக இருக்கின்றன. கடந்த காலத்தை ஆராய்ந்துபார்க்க தவறுவது எமது தோல்விகள் அல்லது தவறுகளுக்கான காரணங்களை உறுதிப்படுத்துவதற்கு உதவுவதில்லை. ஆட்சிமுறைமையை துஷ்பிரயோகம் செய்தவர்களுக்கு அல்லது நேர்மையற்ற முறையில் சேதப்படுத்தியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை தவிர்ப்பதும் உதவப்போவதில்லை. நிதி வளத்தைப் பொறுத்தவரை நாட்டை ஒப்பேறக்கூடியதாக்குவதற்கு முன்னெடுக்கப்படும் இந்த பொருளாதார மறுசீரமைப்பின் செலவுச்சுமை நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் அவர்களுக்கு கீழ் உள்ளவர்கள் மீதே விகிதப்பொருத்தமில்லாத அளவுக்கு கடுமையாக விழப்போகிறது.

வாழ்க்கைச் செலவு வானளாவ உயர்ந்துகொண்டிருக்கும் ஒரு நேரத்தில், நிலையான வருமானத்தைப் பெறுகின்றவர்களைப் பொறுத்தவரை உயர்ந்த மட்டங்களிலான வரிகளினால் இருமடங்கு சுமையை தாங்க வேண்டியவர்களாக இருப்பதால் அவர்கள் மிகவும் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள். செலவு அதிகரிப்புக்களை தங்களது வாடிக்கையாளர்கள் மீது சுமத்திவிடக்கூடிய நிலையில் இருக்கும் வர்த்தக சமூகத்தினர் மற்றும் சுயாதீன துறைசார் நிபுணத்துவ பிரிவினரைப் போலன்றி, இந்த நிலையான வருமானத்தைப் பெறும் பிரிவினர் வாழ்க்கையச் சமாளிப்பதற்கு பெரும் சிரமப்படுகின்றனர். 12 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் அல்லது சனத்தொகையில் ஐந்து சதவீதமானவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக கடந்தவருடம் நாட்டை விட்டு வெளியேறியிருப்பதாக குடியகல்வு புள்ளிவிபரங்கள் காடடுகின்றன.

மக்கள் அனுபவிக்கின்ற பொருளாதார இடர்பாடுகள் பாரம்பரிய தொழிற்சங்கங்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் அமைப்புக்களின் ஒன்றிணைந்த போராட்டங்களுக்கு வழிவகுத்திருக்கின்றன. தங்களுக்கு பாதிப்பாக அமையக்கூடிய முறையில் வருவாய்ப் பெருக்கத்தில் ஈடுபடும் அரசாங்கத்துக்கு எதிராக இவர்கள் போர்க்கொடி தூக்கியிருக்கிறர்கள். அடையாள வேலைநிறுத்தம் என்று வர்ணிக்கப்பட்ட கடந்த வாரத்தைய வேலைநிறுத்தம் இணக்கமான ஒரு பிரதிபலிப்பை வெளிப்படுத்தவேண்டிய நிர்ப்பந்தத்தை அரசாங்கத்துக்கு ஏற்படுத்தும் அளவுக்கு வெற்றிகரமானதாக அமைந்தது. ஜனாதிபதிக்கு நெருக்கமான அரசாங்க உறுப்பினர் ஒருவர் அச்சுறுத்தியதைப் போன்று தொழில்களை இழக்கவேண்டிவரும் என்பது மாத்திரமல்ல, சொத்துக்களும் சுவீகரிக்கப்படக்கூடும் என்ற அச்சம் காரணமாக போலும் பல ஊழியர்கள் வேலைக்கு வராமல் இருக்கவில்லை.

இதற்கு ஒரு முன்னுதாரணம் இருக்கிறது. 1980 ஜூலை வேலைநிறுத்தின்போது ஊழியர்கள் வேலையில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று அன்றைய அரசாங்கம் எச்சரித்தது. அந்த எச்சரிக்கையை நடைமுறைப்படுத்திய அரசாங்கம் 40 ஆயிரத்துக்கும் அதிகமான அரச ஊழியர்களை வேலைநீக்கம் செய்தது. அந்த ஊழியர்களும் அவர்களின் குடும்பங்களும் பல வருடங்களாக பெரும் கஷ்டப்படவேண்டியேற்பட்டது. அன்றைய அரசாங்கம் மக்களின் ஆமோக ஆணையைக் கொண்ட ஒன்றாக இருந்த காரணத்தினால் சமூகத்தின் ஏனைய பிரிவினர் அடக்குமுறைக்கு எதிராக எதையும் செய்யமுடியவில்லை.

**தற்காலிக ஓய்வு**

தங்களது பொருளாதாரக் கஷ்டங்களையும் மனக்குறைகளையும் பரிசீலனைக்கு எடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வந்திருப்பதன் விளைவாக வேலைநிறுத்தப் போராட்டத்தை தற்காலிக மாக Determination nra;tjhf தொழிற்சங்கங்கள் அறிவிததிருக்கின்றன.

பல்வேறு துறைகளையும் சேர்ந்த நாற்பதுக்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் இணைந்தன. தங்களது கோரிக்கைகளுக்கு அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை என்பதனாலேயே வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டதாக அவை விளக்கமளித்தன. வேலைநிறுத்தத்தின் விளைவாக சுகாதாரம், தபால் மற்றும் ரயில் போன்ற சேவைகள் பாதிக்கப்பட்டன.

கல்வி, துறைமுகம், நீர்விநியோகம், பெற்றோலியம், வீதி அபிவிருத்தி, மின்சாரம் மற்றும் வங்கிச்சேவைகள் உட்பட ஏனைய துறைகளையும் சேர்ந்த ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் இணைந்தனர். தங்களது பிரச்சினைகள் மற்றும் அக்கறைகள் குறித்து ஆராய முன்வருவதாக ஜனாதிபதி செய்த அறிவிப்பு தொடர்பில் அரசாங்கத்துடன் பேசவிருப்பதாக கூறிய வேலைநிறுத்தம் செய்த தொழிற்சங்கங்கள் போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தியிருக்கின்றன. இது அரசாங்கம் அதன் தந்திரோபாயத்தை மறுபரிசீலனை செய்வதற்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கும். 1980 பதவியில் இருந்த அரசாங்கத்தைப் போலன்றி தற்போதைய அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை கிடையாது. கடந்த வருடத்தைய மக்கள் போராட்ட இயக்கத்துக்கு பிறகு இன்றைய அரசாங்கத்துக்கு ஒரு சட்ட ஆணை மாத்திரமே இருக்கிறது.

மக்களின் விரக்திக்கும் வெறுப்புக்கும் மத்தியில் அரசாங்கம் இதுவரையில் விட்டுக்கொடுக்காமல் இருந்துவருகிறது. மக்கள் போராட்டம் அடக்கியொடுக்கப்பட்டிருக்கிறது. போராட்ட இயக்கத் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டருக்கிறார்கள். திட்டமிடப்பட்டபடி பொருட்களின் விலைகளும் வரிகளும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. அரசியல் உறுதிப்பாட்டுக்கும் நிதி வளங்கள் பெருக்கத்துக்கும் அவசியமான பொருளாதார மீட்சிக்கு முன்னுரிமை கொடுப்பது என்ற அடிப்படையில் அரசாஙகம் தான் எடுக்கும் மிகவும் கடுமையான நிலைப்பாடுகளை நியாயப்படுத்திக்கொண்டுவருகிறது.

ஆனால், மக்களின் அபிப்பிராயத்தை செவிமடுக்க மறுப்பதன் மூலமாக அரசாங்கம் தன்னை தொழிற்சங்கங்களாக இருந்தாலென்ன அரசியல் கட்சிகளாக இருந்தாலென்ன ஒழுங்கமைக்கப்பட்ட சக்திகளுடன் ஒரு மோதல் போக்கிற்கே கொண்டுசெல்கிறது. சமூகத்தின் ஏனைய பிரிவுகள் ஒப்பீட்டளவில் பாதிக்கப்படாமல் இருந்தாலும் கூட பொருளாதார சுமையின் கடுமை பரந்தளவு பிரிவினரை பெரிதும் பாதிக்கிறது. இது ஒரு பெரும் அநீதி என்ற எண்ணம் தோன்றியிருக்கிறது. அதை நிச்சயம் அதற்றவேண்டும். தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதும் மக்கள் போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பிலான அணுகுமுறையை மறுபரிசீலனை செய்வதும் தற்போதைய சூழ்நிலையில் சமாதானத்தை ஏற்படுத்தும் சைகைகளாக அமையமுடியும்.

மறபுறத்தில், சட்டத்தின் பிரகாரம் நடத்தவேண்டியிருப்பதும் ஏற்கெனவே இரு தடவைகள் தேர்தல் ஆணைக்குழுவினால் திகதி நிர்ணயிக்கப்பட்டதுமான உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு அரசாஙகம் தொடர்ச்சியாக காட்டிவருகின்ற மறுப்பு அரசியல் நெருக்கடியை மோசமாக்குகிறது. தேர்தல்களுக்கு தேவையான நிதி வளங்களை திறைசேரி விடுவிக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவுகளுக்கு முரணாகவும் எடுத்திருக்கும் நிலைப்பாட்டினால் அரசாங்கம் அதற்கான எதிர்ப்பை தொடர்ந்து விரிவடையச்செய்துகொண்டே போகிறது.

மக்களின் ஆதரவைப் பெறுவதில் தனக்கு இருக்கும் ஆற்றல் தொடர்பில் அரசாங்கத்துக்கு இருக்கும் அச்சவுணர்வே அது உள்ளூராட்சி தேர்தல்களை குழப்புவதற்கு கொண்டிருக்கும் திடசங்கற்பத்துக்கு காரணமாகும். எதிரணி கட்சிகளையும் விட மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே அரசாங்க கட்சிகளின் மக்கள் செல்வாக்கு இருக்கிறது என்று கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன. ஜனாதிபதி விக்கிரமசிங்கவை தவிர மற்றும்படி ஒரு வருடத்துக்கு முன்னர் மக்கள் இயக்கத்தின் சீற்றத்துக்கு முகங்கொடுக்கமுடியாமல் அபகீர்த்திக்குள்ளாகி பதவியில் இருந்து விலகிய அதே அரசியல் கட்சிகளினதும் அரசாங்கத்தினதும் உறுப்பினர்களையே தற்போதைய அரசாங்கம் கொண்டிருக்கிறது.

**ஜனாதிபதியின் தெரிவுகள்**

அரசாங்கம் இதுவரையில் அதற்கு இருக்கக்கூடிய நெருக்குதல்களுக்கு பொலிஸ் நடவடிக்கைகளின் மூலமாக போராட்ட இயக்கத்தை ஒடுக்குவதன் மூலமே பதிலளித்துவருகிறது. வீதிப்போராட்டங்களை அரசாங்கம் பொறுத்துக்கொள்ளத் தயாராயில்லை. அத்துடன் சட்டத்தைப் பொருட்படுத்தாமல் அரசாங்க நிறுவனங்கள் தனது விருப்புக்கேற்ப செயற்பட வேண்டும் என்று அவை மீது அரசாங்கம் நெருக்குதலை யும் பிரயோகிக்கிறது. உள்ளூராட்சி தேர்தல்களுக்கான திகதிகளை நிர்ணயிப்பதில் தேர்தல் ஆணைக்குழு எடுத்த தீர்மானம் ஒரு தடவை அவமதிக்கப்பட்டிருக்கிறது. அந்த தேர்தல்களை மீண்டும் ஒத்திவைக்க வேண்டியிருக்கிறது போன்று இப்போது தோன்றுகிறது. அரசாங்கத்தை பொறுப்புக்கூற வைப்பதற்கு தன்னாலியன்றவரை சிறப்பாக சுயாதீனமாக செயற்பட்டுவரும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அமைச்சர்களுக்கு விடுக்கின்ற அழைப்பாணைகளையும் அரசாங்கம் அவமதிக்கிறது.

தேர்தல் நோக்கங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை நிறுத்திவைப்பதற்கு எதிரான உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை மதித்துச் செயற்படுவதற்கு அரசாங்கம் மறுப்பது நீண்டகால நோக்கில் நாட்டுக்கு பெரும் பாதகத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் சட்டத்தின் ஆட்சிக்கு பெரும் தாக்கமாகும். இவையெல்லாம் எதிர்காலத்தில் தகராறுகளையும் சட்டம் ஒழுங்கு இன்மையையும் கொண்டுவரக்கூடிய எதிர்மறையான போக்குகளாகும்.இவை நீண்காலத்துக்கு நாட்டின் அபிவிருத்திக்கும் விழுமியங்களுக்கும் பாரிய பாதக விளைவுகளைக் கொண்டுவரக்கூடியவையாகும்.

நிலைவரத்தின் பாரதூரத்தன்மையை விளங்கிக் கொள்ளக்கூடியவராக ஜனாதிபதி விக்கிரமசிங்க இருக்கிறார் என்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. பிரச்சினைகள் தொடர்பில் நெருக்குதல்கள் அதிகரிப்பது தவிர்க்கப்படவேண்டும்.அனுபவமிக்க ஒரு அரசியல் தலைவராகவும் சிறந்த வாசிப்பு பழக்கத்தைக் கொண்ட சர்வதேச அரசியல் மாணவராகவும் இருக்கும் ஜனாதிபதி அரச்ங்கத்தின் மூன்று கிளைகளுக்கும் இடையில் ஏற்படக்கூடிய ஒரு மோதல் கொண்டுவரக்கூடிய ஆபத்துக்களை நன்கு அறிவார்.

நீதித்துறையுடனான ஒரு மோதல் அல்லது நீதித்துறையின் தீர்மானங்களை மறுதலிக்கும் செயல் சட்டமுறைமை முழுமையின் மீதுமான நம்பிக்கையை அரித்துச்சென்றுவிடும். அரசியல் சமுதாயத்தின் உறுதிப்பாடு மற்றும் சட்டத்தின் ஆட்சி மீது அதற்கு இருக்க வேண்டிய பற்றுறுதியில் முதலீட்டாளர் களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் நம்பிக்கையை இல்லாமல் செய்துவிடும். உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த வேண்டிய தேவை குறித்த அமெரிக்கத் தூதுவரின் வலியுறுத்தல் இந்த உண்மையை உணர்த்தியிருக்கும்.

உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தவேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பில் அமெரிக்காவைப் போன்றே ஏனைய மேற்குலக நாடுகளும் ஜப்பானும் அதே நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றன.ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை போன்ற நிதிச்சலுகைகள் மற்றும் பயன்களின் வடிவில் உலகின் மிகவும் பெரிய தனவந்த நாடுகளான இவற்றின் இலங்கை அதன் பொருளாதார உயிர் வாழ்வு, வர்த்தகம் மற்றும் உதவிகளுக்காக தங்கியிருக்கிறது.அதனால் உள்நாட்டிலும் சர்வதேச சமூகத்திடமிருந்தும் வருகின்ற இந்த நெருக்குதல்கள் தேர்தல்களின் திசையில் அரசாங்கத்தை உந்தித்தள்ளி மக்களிடமிருந்து புதிய ஆணையைப் பெற நாட்டம் கொள்ளவைக்கக்கூடும்.

உருப்படியான முறையில் ஆட்சி செய்வதற்கு அரசாங்கத்தின் நியாயப்பாட்டை வலுப்படுத்தவும் தேசிய நலன்களுக்காக பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முயற்சாகளில் ஈடுபடவும் தேர்தல் ஆணையொன்று தேவை.வேண்டப்படும் ஆணை உள்ளூராட்சி மட்டத்தில் இல்லாமல் இருக்கலாம்.அங்கு அரசாங்கம் மிகவும் பலவீனமான நிலையில் இருப்பதை கருத்துக்கணிப்புக்கள் காட்டுகின்றன.ஆனால் , ஜனாதிபதி தனது தற்துணிபை பிரயோகிக்கக்கூடிய தேசிய மட்டத்தில் அந்த ஆணை வரக்கூடும்.

# திறைசேரி செயலர் தேர்தலுக்கான நிதியை 7 நாளில் விடுவிக்கவேண்டும்!

## காலக்கெடு விதிக்கிறார் பீரிஸ் எம். பி.

கொழும்பு, மார்ச் 21

திறைசேரியின் செயலாளர் ஏழு நாட்களுக்குள் தேர்தல் பணிகளுக்கான நிதியை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்க வேண்டும். உயர்நீதிமன்றத்தின் இடைக் காலத் தடையுத்தரவை புறக்க ணித்து நிறைவேற்றுத் துறையின் ஆலோசனைக்கு அமைய செயற்பட்டால் மகிந்த சிறிவர்தனவுக்கு எதிராக சகல எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்து நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்வோம் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந் திர மக்கள் சபை பணிமனை யில் நேற்று நடத்திய ஊடகவி யலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர் தல் விவகாரம் இழுபறி நிலை யில் உள்ளாக்கப்பட்டு, தேர்தல் செயல்பாடுகள் கேலிக்கூத்தாக் க ப் பட்டுள்ளமைக்கு எவரும் பொறுப்பேற்காத நிலை காணப்படுகிறது.

அரச அச்சகத் திணைக் களத்தின் பொறுப்பற்ற செயற் பாடுகளை அடிப்படையாக கொண்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி உள்ளூ ராட்சி மன்றத் தேர்தல் இடம் பெறாது என்பதை குறிப்பிட வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர் தலை நடத்துவதற்கு சட்டத் தின் ஊடாக எவ்வித தடை களும் இல்லை,இதன் காரண மாகவே தேர்தல் பணிகளை தொடருமாறு உயர்நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்தது. நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை மதித்து செயற்படாமல், நீதிமன்றத்தை புறக்கணிக்கும் வகையில் அரசாங்கம் செயல்படுகிறது.

2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை விடு விக்காமல் இருக்கும் திறைசேரி யின் செயலாளரின் செயற்பாட் டுக்கு எதிராக உயர்நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்தது, இந்த தடையுத்த ரவை திறைசேரியின் செயலா ளர் மதிக்காமல் செயல்படு கிறார்.

அரசியல் ரீதியில் எதிர்க் கட்சிகளுக்கு இடையில் வேறுபாடுகள் காணப்பட் டாலும் நாட்டு மக்களின் வாக்குரிமையை பாதுகாக்கும் செயற்பாடுகளில் ஒன்றி ணைந்து செயற்படுகிறோம்.

ஆகவே இன்றைய தினத்தில் (நேற்று) இருந்து ஏழு நாட்க ளுக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பணிகளுக்கு தேவை யான நிதியை திறைசேரியின் செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஒப்ப டைக்க வேண்டும், இல்லா விடின் சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து திறைசேரியின் செயலாளருக்கு எதிராக நீதி மன்ற அவமதிப்பு வழக்கு தாக் கல் செய்வோம் - என்றார்.

(ஐ)

# பொலிஸ்மா அதிபராக தேசபந்துவை நியமிப்பதற்கு ஜனாதிபதி மறுப்பு!

கொழும்பு, மார்ச் 21

புதிய பொலிஸ் மா அதிபராக மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக் கோனை நியமிக்க பொது பாதுகாப்பு அமைச்சர் வழங்கிய பரிந்துரையை ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க நிராகரித்து விட் டார் என்று ஜனாதிபதி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம் உள்ளிட்ட பல முக்கிய பிரச்னைகளில் சிக்கியவர் தேசபந்து தென்னக் கோன். இவரை பொலிஸ் மா அதிபராக நியமிக்க சிபாரிசு வழங்கப்பட்ட தாக தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த நிலையிலேயே தேசபந்து தென்னக் கோனை பொலிஸ் மா அதிபராக நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மறுத்துவிட்டார் என்று தெரிய வருகின்றது. மேலும், தற்போதுள்ள பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரட்ணவின் பதவிக் காலத்தை ஒரு வருடம் நீடிக்கவும் வாய்ப்புள்ளதாகவும்

# மூன்று வாழைக்குலைகளை திருடியோருக்கு கடூழிய சிறை!

கொழும்பு, மார்ச் 21

காணி ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்து 3500 ரூபாய் பெறுமதியான 3 வாழைக்குலைகளை திருடிய குற்றச்சாட்டில் இருவருக்கு மினுவாங்கொடை நீதிவான் நேற்று ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்தார்.

கட்டுநாயக்க, ஆடியம்பலம் மற்றும் சரணதிஸ்ஸ ஆகிய கிராமங்களில் வசிக்கும் இருவ ருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டது.

குற்றவாளிகளுக்கு ஏற்கெனவே குற்ற வழக்குகள் இல்லாததால், கடின உழைப் புடன் கூடிய சிறைத்தண்டனை பத்து ஆண்டுகளுக்கு இடை நிறுத்தப்பட்டது மற்றும் அந்த 10 ஆண்டுகளில்அவர்கள் நல்ல நடத்தையுடன் இருக்குமாறு நீதிபதி அறிவித்தார்.

2020 செப்ரெம்பர் 22 ஆம் திகதி அல்லது அதனை அண் மித்த நாட்களில் கட்டுநாயக்க, வல்பொல பிரதேசத்தில் இவர் கள் வாழைக்குலை திருட்டில் ஈடுபட்டனர் என்று தெரிவிக் கப்பட்டது.

(ஐ)

## பொலிஸாரை தாக்கியவர் கைக்குண்டுடன் கைது!

மட்டக்களப்பு, மார்ச் 21

காத்தான்குடி பொலிஸ் பிரிவி லுள்ள ஆரையம்பதி பிரதேசத் தில் விசாரணைக்கு சென்ற பொலிஸார் மீது தாக்குதலை நடத்தி தப்பிச் சென்றவர் நேற்று முன்தினம் இரவு கைக்குண்டு டன் கைது செய்யப்பட்டுள் ளார் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

நேற்று முன்தினம் 119 அவசர சேவை பிரிவுக்கு கணவர் தன்னை அடித்து துன்புறுத்துவதாக ஆரையம்பத ியிலிருந்து பெண் ஒருவர் முறைப்பாடு அளித்தார்.

இதனையடுத்து, இரு பொலிஸார் வாகனத்தில் விசாரணைக்காக சென்றனர். அவர்களை தாக்கி விட்டு சந்தேகநபர் அங்கிருந்து தப்பிச் சென்றார். (ஐ)

கல்வி tv CHANNEL-1

**21.03.2023**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**21.03.2023**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ஜனாதிபதியின் அதிகாரத்துக்கும் மக்கள் உரிமைக்கும் பலப்பரீட்சை

## சுட்டிக்காட்டுகின்றார் சிறிநேசன்



நிந்தவூர், மார்ச் 21

**மக்களாணை பெறாத ஜனாதிபதியின் அதிகாரத்துக்கும், மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கும் இடையே தற்போது பலப்பரீட்சை நடைபெறுகின்றது என்று மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.சிறிநேசன் குறிப்பிட்டார்.**

சமகால அரசியல் நிலை குறித்து அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது:- வரிச்சுமை, மின்சாரக் கட்டண உயர்வு, வருவாய்க்குறைவு என்பவற்றுக்கு எதிராக மக்கள் ஜனநாயக ரீதியாக வீதிக்கிறங்கி போராடுகின்றனர். மேலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தடுப்பதிலும் ஜனாதிபதி தனது அதிகாரத்தினைப் பிரயோகித்து வருகின்றார். சுயாதீன தேர்தல் ஆணைக் குழுவின் தேர்தல் செயற்பாடுகளை நிதியமைச்சர் என்ற அதிகாரத்தினால் ஜனாதிபதி கட்டி வைத்துள்ளார்.

இவ்வாறான நிலை யில் எதிர்க்கட்சிகள் மக்களுடன் வீதிக்கு இறங்கிப் போராடி வருகின்றனர். அதாவது ஜனநாயக ரீதியாக வன்முறைகள் இல்லாமல் போராட்டங்கள், எதிர்ப்புகள் நடைபெறுகின்றன. ஆனால் ஜனாதிபதி தனது மாமனாரான ஜெயவர்தனாவைப் போன்று அதிகார இரும்புக்கரம் கொண்டு போராட்டங்களை ஒடுக்கி வருகின்றார்" என்றார். (அ-06)



# வைத்தியசாலையின் பணிகள் பற்றி அறிய பற்றிமா தேசிய கல்லூரி மாணவர் விஜயம்!

அம்பாறை, மார்ச் 21

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் பணிகள் பற்றி அறிய கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் முதலாம் ஆண்டு உயர்தர மாணவர்களின் களவிஜயம் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் அதிபரையும் மாணவர்களையும் வரவேற்று விளக்கவுரை நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில் - வைத்தியசாலை என்பது தனி மருந்துகளை மட்டும் வழங்கும் நிறுவனமாக அல்லாமல் உடல், உள பிரச்னைகளுக்கு தீர்வை வழங்கக்கூடிய நிறுவனமாகும். இதற்காக வைத்தியசாலை பல்வேறு வகைப்பட்ட கட்டமைப்புகளைக் கொண்டு இயங்குகின்றது. மற்றும் இங்கு வரும் நோயாளிகளுக்கான சிகிச்சை ஒரு குழு நடவடிக்கையாக இடம்பெறுகிறது. இதன்போது வைத்திய நிபுணர்கள் முதல் சுத்திகரிப்பு பணியாளர்கள் வரை இவ் வைத்தியசாலையின் சிறந்த சேவைக்காக தங்களை அர்ப்பணிக்கின்றார்கள்.

உயர்தர முதலாம் ஆண்டு மாணவர்களாகிய நீங்கள் உங்கள் எதிர்காலத்தை பயனுள்ளதாகவும் அர்த்தமுள்ளதாகவும் கொண்டு செல்லவும், வைத்தியசாலை சேவைகள் பற்றிய அறிவை பெறவும், இந்த காலகட்டத்தில் கல்வியில் உள பிரச்னைகள் ஏற்படும் வேளைகளில் அவற்றிற்கான தீர்வு கிடைக்கும் இடமாகவும் வைத்தியசாலை இடம்பெறுகிறது-என்றார். (அ)

# கிழக்கு காணிப் பிரச்னைகள் நிந்தவூர் பகுதியில் செயலமர்வு



அம்பாறை, மார்ச் 21

கிழக்கு மாகாண காணி பிரச்னை மற்றும் தேசிய காணி கொள்கை தொடர்பில் மக்கள் காணி ஆணைக்குழுவின் அறிக்கை சிபாரிசு செய்வதற்கு கிழக்கு மாகாண மட்டத்தில் உள்ள பல்லின அரசியல் பிரதிநிதிகளுக்கான செயலமர்வு நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை அம்பாறை, நிந்தவூர் பகுதியில் உள்ள அட்டப்பளம் தனியார் விருந்தினர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த செயலமர்வை காணி உரிமைக்கான மக்கள் கூட்டணி மற்றும் மனித எழுச்சி நிறுவனம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

காணி தொடர்பிலான பல்வேறு விளக்கவுரைகள் வளவாளர்களால் வழங்கப்பட்டு இச்செயலமர்வில் கருத்துரைகள் பல முன்வைக்கப்பட்டன.

இதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் முன்னாள் பாரளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்ரூப், சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஏ.எம் நௌஸாத் , கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் சந்திரதாச கலப்பத்தி, முன்னாள் கிழக்கு மாகாண சபை அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை ,முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் , உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். (அ-06)

# மருதமுனை,பெரிய நீலாவணைக்கு எஸ்.எம்.எம்.முஷாரப் எம்.பி. விஜயம்!

## மக்கள் பிரச்னைகள் குறித்து ஆராய்வு



அம்பாறை, மார்ச் 21

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷா ரப் மருத முனைக்கு சென்று மக்கள் பிரச்னைகளை ஆராய்ந்தார்.

கடந்த வியாழக்கிழமை கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலியின் தலைமையில் கல்முனை பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட விசேட தீர்மானத்தின் அடிப்படையில் மருதமுனை 65 மீற்றர் சுனாமி வீடமைப்புத் திட்டத்தைக் கையளிப்பது தொடர்பில் ஆராய்வதற்காகவும் நீண்ட காலப் பிரச்னையாக இருக்கின்ற பெரியநீலாவணை தொடர்மாடி குடியிருப்புத் திட்டத்தின் கழிவு நீர் அகற்றல் பிரச்னை குறித்து தீர்மானம் மேற்கொள்வதற்காகவும் அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டார்.

இதன்போது மருதமுனை 65 எம் வீடமைப்புத் திட்டத்தை எதிர்வரும் சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் உரிய பயனாளிகளிடம் கையளிக்க தீர்மானிக்கப்பட்டது.

கல்முனை அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் இது குறித்து முஷாரப் எம்.பியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

பின்னர் வீடமைப்பு குறித்து, பிரதேச செயலாளரிடம் மேலதிக தகவலை பெற்ற கல்முனை அபிவிருத்தி குழு தலைவரான முஷாரப் எம்பி அடுத்த ஒரு வார காலத்துக்குள் பயனாளிகளின் பட்டியலை பூர்த்தி செய்யுமாறு பணிப்புரை விடுத்தார். (அ)

# உள்ளூராட்சி சபைகளின் ஊழல்களை விசாரிக்க அரசு உடனடியாக ஆணைக்குழு நியமிக்க வேண்டும்

## எம். ரி. ஹசன் அலி வலியுறுத்து



நிந்தவூர், மார்ச் 21

உள்ளூராட்சிச் சபைகளின் ஊழல்களை விசாரிக்க அரசாங்கம் உடனடியாக விசேட ஆணைக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், சுகாதார துறை முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம். ரி. ஹசன் அலி தெரிவித்தார்.

நிந்தவூரில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- உள்ளூராட்சி சபைகள் 19 ஆம் திகதி நள்ளிரவு முதல் கலைக்கப்பட்டு உள்ளன. அதே நேரத்தில் பல சபைகளிலும் ஊழல்கள் இடம்பெற்று உள்ளன என்று குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது. ஊழல்கள் சபை உறுப்பினர்களுடன் சம்பந்தப்படுத்தி பேசப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே சபைகளை கலைத்துள்ள அரசாங்கம் ஊழல்கள் தொடர்பாக விசாரிக்க உடனடியாக விசேட ஆணை குழு ஒன்றை நியமிக்க வேண்டும். நாடு இன்று எதிர்கொண்டு உள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம் ஊழல் ஆகும், எனவே ஊழல் குறித்த விசாரணை உடனடியாக நடத்தப்படவேண்டும்.

ஊழல் பெருச்சாளிகளை மக்கள் அடையாளம் காண வேண்டியது அவசியம். அப்போதுதான் எதிர்கால தேர்தல்களில் சரியானவர்களுக்கு வாக்களிப்பார்கள். இதற்காகவும் உடனடியாக ஊழல் விசாரணை நடத்தப்பட்டு ஊழல் பெருச்சாளிகள் அம்பலப்படுத்தப்பட வேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்றோம்.

இதே நேரம் கலைக்கப்பட்ட சபைகளின் நிர் வாகம் மாகாண ஆளுநர்களுக்கு கீழ் கொண்டு வரப்படவே கூடாது. மேலும் கலைக்கப்பட்ட சபைகளின் நிர்வாக கட்டமைப் புக்குள் எந்த வகையிலும் கலைக் கப்பட்ட உறுப்பினர்கள் மீண்டும் உள்ளீர்க்கப்படவும் கூடாது.

ஏனென்றால் சபைகளில் இடம்பெற்று இருக்க கூடிய ஊழல்கள் மறைக்கப்படவும், ஊழல்களோடு சம்பந்தப்பட்டு இருக்கக்கூடிய உறுப்பினர்கள் காப்பாற்றப்படவும் இவை வழி ஏற்படுத்தி விடும்-என்றார்.(அ-06)

# ஈரான் ஜனாதிபதியை அழைக்கின்றது சவூதி!

## இராஜதந்திர உறவுகளை வலுவாக்க



தெஹ்ரான், மார்ச் 21

**இரு நாடுகளும் இராஜதந்திர உறவுகளை மீட்டெடுக்க ஒப்புக்கொண்ட ஒரு வாரத்துக்குள், ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியை உத்தியோகபூர்வ விஜயத்துக்கு சவூதி அரேபியா அழைத்துள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது.**

இந்த அழைப்பிதழ் மன்னர் சல்மான் மூலம் வந்ததாக கூறப்படுகிறது. ஆனால் சவூதியால் இன்னும் இது உறுதிப்படுத்தப்படவில்லை.

இரு நாடுகளும் வெளியுறவு அமைச்சர் மட்டத்தில் சந்திப்பை நடத்த ஒப்புக்கொண்டதாகவும், மூன்று சாத்தியமான இடங்கள் முன்மொழியப்பட்டதாகவும் ஈரானின் வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமீர்-அப்துல்லாஹியன் தெரிவித்தார்.

ஆனால், இச்சந்திப்பு எப்போது நடைபெறும் மற்றும் நடைபெறும் இடம் உள்ளிட்ட விடயங்களை குறிப்பிடவில்லை.

மத்திய கிழக்கு பிராந்திய போட்டியாளர்களான ஈரான் மற்றும் சவூதி அரேபியா ஆகிய இரு நாடுகளும், ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, இராஜதந்திர உறவுகளை மீட்டெடுக்க அண்மையில் ஒப்புக்கொண்டன.

துண்டிக்கப்பட்ட உறவுகளை மீட்டெடுக்க இரு நாடுகளும் இடையே சீனா, மேற்கொண்ட நான்கு நாட்கள் பேச்சுவார்த்தைக்குப் பிறகு இது சாத்தியமாகியது.

நல்லிணக்கத்துக்கான முயற்சியில் இரண்டு மாதங்களுக்குள் தூதரகங்களை மீண்டும் திறப்பதாகவும், வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு உறவுகளை மீண்டும் ஏற்படுத்துவதாகவும் இருவரும் அறிவித்துள்ளனர்.

நல்லிணக்கத்திற்கான முந்தைய முயற்சிகள் பலனளிக்காததால், இந்த வளர்ச்சியை அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகள் சபை உட்பட பலர் எச்சரிக்கையுடன் வரவேற்றனர்.

மத்திய கிழக்கின் சமீபகால வரலாறு இரு நாடுகளுக்கும் இடையிலான பகைமையால் ஆதிக்கம் செலுத்துகிறது. பிராந்தியத்தின் புவிசார் அரசியலை மறுவடிவமைக்கக்கூடிய முன்னெடுப்புக்கு இடைத் தரகாக சீனா செயற்பட்டது.

சவுதி ஒரு முக்கிய ஷியா முஸ்லீம் மதகுருவை தூக்கிலிட்டதைத் தொடர்ந்து ஈரானில் உள்ள அதன் தூதரகத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கியதை அடுத்து, ஜனவரி 2016 இல் சவுதி அரேபியா உறவுகளை துண்டித்தது.

சன்னி மற்றும் ஷியா தலைமையிலான அண்டை நாடுகளுக்கு இடையே அடிக்கடி பதற்றம் இருந்து வருகிறது. அவர்கள் ஒருவரையொருவர் பிராந்திய மேலாதிக்கத்தை தேடும் ஒரு அச்சுறுத்தும் சக்தியாக கருதுகின்றனர்.

(அ)

# டிரம்ப் விரைவில் கைது?



கொழும்பு, மார்ச் 21

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் (வயது 76) சமூக வலைத்தளத்தில் ஒரு பதிவை வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில் அவர் தெரிவிக்கையில்- நியூயோர்க் மன்ஹற்றன் அரசாங்கம் சட்டத்தரணி அலுவலகத்தில் இருந்து வெளியான சட்ட விரோத தகவல் கசிவுகள், அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான குடியரசு கட்சியின் முன்னணி வேட்பாளராக உள்ள முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் வரும் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்படுவார் எனத் தெரிவிக்கின்றன' என்று கூறியுள்ளார்.

இதை எதிர்த்து போராடுமாறு தனது ஆதரவாளர்களை ட்ரம்ப் கேட்டுக்கொண்டுள்ளார். ட்ரம்பை கைது செய்து குற்றம் சாட்டுவதற்கான வாய்ப்பு உள்ளதால் அங்கு சட்ட அமலாக்கல் அதிகாரிகள் பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# புடினின் மரியுபோல் பயணத்துக்கு உக்ரைன் அரசு கொடுத்த பதிலடி!

கீவ், மார்ச் 23


ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர்புடின் மரியுபோல் நகரை பார்வையிட்ட சென்றமைக்கு உக்ரைன் தரப்பு பதிலடி கொடுத்துள்ளது.

போரில் கைப்பற்றப்பட்ட உக்ரைனின் மரியுபோல் நகருக்கு புடின் நேற்று முன்தினம் இரவு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

ஹெலிகொப்டர் மூலம் வந்தடைந்த புடின், அங்கிருந்த கலை பாடசாலை, குழந்தைகள் மையம் ஆகியவற்றில் வசிப்பவர்களையும் சந்தித்துள்ளார்.

இந்நிலையில் "குற்றவாளி எப்போதும் குற்றம் நடைபெற்ற இடத்துக்கு திரும்புவான்" என்று உக்ரைன் ஜனாதிபதியின் ஆலோசகர் மைக்கைலோ பொடோலியாக் கூறியுள்ளார்.

ருவிட்டர் பதிவின் மூலம் அவர் இதனை தெரிவித்துள்ளார்.


Михайло Подоляк
@Podolyak_M · Follow
The criminal always returns to the crime scene. As the civilized world announces the arrest of the "war director" (VV Putin) in case of crossing its borders, the murderer of thousands of Mariupol families came to admire the ruins of the city & graves. Cynicism & lack of remorse.
5:01 PM · Mar 19, 2023
2.2K Reply Share
Read 118 replies

அந்த பதிவில், ரஷ்யா அதன் எல்லைகளை தாண்டியதால், நாகரீக உலகம் "போர் இயக்குனரை" (விளாடிமிர் புடினை) கைது செய்வதாக அறிவிக்கும்போது, ஆயிரக்கணக்கான மரியுபோல் குடும்பங்களை கொலை செய்த கொலைகாரன் நகரின் இடிபாடுகளையும் கல்லறைகளையும் ரசிக்க வந்துள்ளார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# கொங்கோவில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் 22 பேர் பலி!



கின்ஷாசா, மார்ச் 21

கொங்கோ நாட்டில் கிளர்ச்சியாளர்களின் அமைப்பு நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் 22 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதல் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ குடியரசில் பல ஆண்டுகளாக உள்நாட்டுப்போர் நடைபெற்றுவருகிறது.

அதேவேளை, கொங்கோவில் பல்வேறு அமைப்பைச் சேர்ந்த குழுக்களும் செயல்பட்டு வருகின்றன.

குறித்த கிளர்ச்சிவாத அமைப்புக்களைச் சேர்ந்த குழுக்கள் அவ்வப்போது பொதுமக்கள் மீதும் பாதுகாப்புப் படையினர் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த தாக்குதல் சம்பவங்களில் பலர் உயிரிழந்தும் வருகின்றனர். கிளர்ச்சியாளர்களை ஒழிக்கும் நடவடிக்கையில் கொங்கோ பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கொங்கோவின் கிழக்கு இடுரி மற்றும் வடக்கு கிவு மாகாணங்களில் நேற்று முன்தினம் கிளர்ச்சியாளர்களின் அமைப்பு திடீர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

குறித்த மாகாணங்களில் உள்ள கிராமங்களுக்குள் புகுந்த கிளர்ச்சியாளர்கள் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாகப் பாதுகாப்புப் படையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், தாக்குதல் நடந்த பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

(அ)

# இங்கிலாந்தில் இந்திய தூதரகம் மீது தாக்குதல்




லண்டன், மார்ச் 21

இங்கிலாந்தில் உள்ள இந்திய தூதரகத்தின் மீது காலிஸ்தான் ஆதரவாளர்கள் சிலர் கற்கள் வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர். ஒரு சிலர் தேசியக் கொடியை கீழே இறக்கி அவமதிப்பு செய்துள்ளனர்.

இதையடுத்து, இங்கிலாந்து அதிகாரிகள் தூதரக வளாகத்தில் புதிய தேசியக் கொடியை பறக்கவிட்டனர்.

இங்கிலாந்தில் நடைபெற்ற இச்சம்பவத்தை கண்டிக்கும் வகையில் மத்திய அரசு தலைநகர் புதுடில்லியில் உள்ள இங்கிலாந்து தூதரக அதிகாரிகளை அழைத்து தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளது.

இது தொடர்பாக, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக குறிப்பில்,இந்திய தூதரக வளாகம் மற்றும் பணியாளர்களின் பாதுகாப் பில் இங்கிலாந்து அரசாங்கத்தின் அலட்சியத்தை இந்தியாவால் ஏற்றுக்கொள்ள முடியாது. தூதரகத்தின் மீது தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய் வது மற்றும் வழக்கு தொடரும் வகையில் இங்கிலாந்து அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என தெரிவித்துள்ளது.

# உலகில் மிக மகிழ்ச்சியாக வாழும் பின்லாந்து மக்கள்!



ஹெல்சிங்கி, மார்ச் 21

உலகின் மகிழ்ச்சியான மக்கள் வாழும் நாடாக பின்லாந்து தெரிவாகியுள்ளது.

இந்தப் பட்டியலில் இரண்டாவது இடத்தை டென்மார்க்கும், மூன்றாவது இடத்தை ஐஸ் லாந்தும் பிடித்துள்ளன.

பட்டியலில் அடுத்த இடத்தில் இஸ்ரேல், நெதர்லாந்து, சுவீடன், நோர்வே, சுவிட்சர்லாந்து, லக்சம்பர்க் மற்றும் நியூசிலாந்து ஆகியன காணப்படுகின்றன.

சமூக ஆதரவு, வருமானம், சுகாதாரம், சுதந்திரம், இனம் மற்றும் ஊழலுக்கு எதிரான விடயங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த பட்டியலில் பின்லாந்து தொடர்ந்து 6ஆவது முறையாக முதலிடம் பிடித்துள்ளமை விசேட அம்சமாகும். (அ)

# இலங்கைக்கு எதிரான டெஸ்ட் நியூசிலாந்து இன்னிங்ஸ் வெற்றி!

வெலிங்டன், மார்ச் 21

இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் இலங்கை அணியை தோற்கடித்தது நியூசிலாந்து அணி. இன்னிங்ஸ் மற்றும் 58 ஓட்டங்களால் இந்தப் போட்டியில் இலங்கை தோற்கடிக்கப்பட்டது. இதனால், 2 - 0 என்ற கணக்கில் இலங்கை தொடரை முழுமையாக இழந்தது.

நியூசிலாந்து சென்றுள்ள இலங்கை அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இரண்டாவது டெஸ்ட் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை வெலிங்டனில் ஆரம்பமானது.

நான்காம் நாளான நேற்று இரண்டாவது இன்னிங்ஸை இலங்கை அணி 113 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்கள் என்ற நிலையில் ஆரம்பித்தது. மூன்றாம் நாள் முடிவில் குசல் மெண்டிஸ் 50, அஞ்சலோ மத்தியூஸ் ஓர் ஓட்டத்துடன் இருந்தனர். நேற்று இருவரும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

மெண்டிஸ் மேலதிகமாக ஓட்டத்தை பெறாமலும், மத்தியூஸ் 2 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த தினேஷ் சந்திமால், தனஞ்சய டி சில்வா இணை சிறப்பான ஆட்டத்தை ஆரம்பித்தது. நிதானமாக ஆடிய இருவரும் 5ஆவது விக்கெட்டுக்காக 126 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். தினேஷ் சந்திமால் 62 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தார்.

அடுத்து வந்த நிஷான் மதுஷ்க தனஞ்சய டீ சில்வாவுடன் இணைந்து சிறப்பான - நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இணைப்பாட்டமாக இருவரும் 76



ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், இருவரும் ஆட்டமிழந்தனர். நிஷான் மதுஷ்க 39 ஓட்டங்களையும் தனஞ்சய டி சில்வா 98 ஓட்டங்களையும் பெற்றனர்.

கசூன் ராஜித வெகு நிதானமாக ஆடினார். இவரால் நியூசிலாந்தின் வெற்றியை தாமதிக்க முடிந்ததே தவிர, மாற்று எதனையும் செய்ய முடியவில்லை. அவர் 110 பந்துகளில் 20 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

142 ஓவர்களை சந்தித்த இலங்கை அணி சகல விக்கெட்களையும் இழந்து 358 ஓட்டங்களைப் பெற்றது.

நியூசிலாந்தின் பந்துவீச்சில் ரிம் சௌதி, ரிக்னெர் தலா 3 விக்கெட்களையும் மிற்செல் பிராஸ்வெல் 2 விக்கெட்களையும் வீழ்த்தினார்.

முன்னதாக, நியூசிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 580 ஓட்டங்களைப் பெற்றது. இதில், கேன் வில்லிம்சன் 215, ஹென்றி நிக்கோல்ஸ் ஆட்டமிழக்காமல் 200 ஓட்டங்களைப் பெற்றனர்.

இலங்கை தனது முதல் இன்னிங்ஸில் 164 ஓட்டங்களைப் பெற்றது. இதில், அணித் தலைவர் திமுத் கருணாரட்ன 89, டினேஷ் சந்திமால் 37 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் பின்தொடரும் நிலைக்கு தள்ளப்பட்ட இலங்கை அணி 358 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. தனஞ்சய டி சில்வா 98, தினேஷ் சந்திமால் 62, திமுத் கருணாரட்ன 51, குசல் மெண்டிஸ் 50 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

போட்டியின் நாயகாக ஹென்றி நிக்கோல்ஸ் தெரிவானார். தொடரின் நாயகனாக கேன் வில்லியம்சன் தெரிவானார். (ஐ)



## தலைமைப் பதவியிலிருந்து திமுத் கருணாரட்ன விலகல்

வெலிங்டன், மார்ச் 21

இலங்கை டெஸ்ட் அணித் தலைவர் பதவியிலிருந்து விலகுவதற்கு திமுத் கருணாரத்ன தீர்மானித்துள்ளார். இது குறித்து அணித் தெரிவாளர்களுக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் தொடரிலும் இலங்கை அணி தோல்வியை தழுவியது. இந்த நிலையில், நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியை வெல்லும் பட்சத்தில் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பு இருந்தும் தோல்வியால் அந்த வாய்ப்பையும் நியூசிலாந்து இழந்தது.

இந்த நிலையிலேயே அயர்லாந்துக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடர் முடிவில் தலைவர் பதவியிலிருந்து விலகிக்கொள்வேன் - என்று திமுத் கருணாரட்ன தெரிவித்தார்.

அயர்லாந்துக்கு எதிராக 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இலங்கை விளையாடவுள்ளது. அந்த 2 போட்டிகளும் காலியில் நடைபெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் போட்டியுடன் புதிய டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடர் ஆரம்பமாகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## டெஸ்ட் சம்பியன்ஷிப் தரவரிசை இலங்கைக்கு மேலும் பின்னடைவு



டுபாய், மார்ச் 21

இலங்கை - நியூசிலாந்து இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்றுடன் நிறைவு பெற்றது. இந்தப் போட்டியைத் தொடர்ந்து ஐ. சி. சியின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் புதிய பருவகாலம் ஆரம்பமாகியுள்ளது.

இந்நிலையில், 2021 - 2023 உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டிக்கு இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் ஏற்கனவே தகுதி பெற்றுவிட்டன. இந்தப் போட்டி வரும் ஜூன் 7ஆம் திகதி லண்டன் ஓவல் விளையாட்டரங்கில் ஆரம்பமாகவுள்ளது.

இதனிடையே, நியூசிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் தோற்று, 2 - 0 என்ற கணக்கில் தொடரிலும் தோல்வியை சந்தித்தது இலங்கை. இதனால், நியூசிலாந்துக்கு எதிரான தொடரின் ஆரம்பத்தில் டெஸ்ட் சம்பியன்ஷிப் தரவரிசையில் இரண்டாவது இடத்திலிருந்து தற்போது ஐந்தாவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

தற்போது, முதலிடத்தில் ஆஸி, அடுத்த இடங்களில் இந்தியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து அணிகள் வகிக்கின்றன. தொடரில் வென்ற நியூசிலாந்து அணி 8ஆவது இடத்திலிருந்து ஆறாவது இடத்துக்கு முன்னேறியுளளது. (ஐ)

## ஜேமிசனுக்கு பதிலாக சென்னையில் மகலா

சென்னை, மார்ச் 21

இந்த ஆண்டுக்கான ஐ. பி. எல். தொடர் வரும் 31ஆம் திகதி அகமதாபாத்தில் தொடங்குகிறது. 31ஆம் தேதி நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் நடப்பு சம்பியன் குஜராத் ஜெயண்ட்ஸ் அணியும், முன்னாள் சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மோதுகின்றன.

இந்த வருட ஐ. பி. எல். தொடருக்கான ஏலத்தின் போது நியூசிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்து வீரர்களில் ஒருவரான கைல் ஜேமிசனை சென்னை எடுத்தது.

இவரின் வருகையின் காரணமாக சென்னை அணியின் வேகப்பந்து வீச்சு பலமாக காணப்பட்டது. ஆனால், சென்னை அணி ரசிகர்களுக்கு அதிர்ச்சி அளிக்கும் விதமாக தொடரிலிருந்து ஜேமிசன் விலகினார். காயம் காரணமாக அவர் விலகியுள்ளார்.

அவருக்கு மாற்று வீரரை அறிவிக்காமல் சென்னை அணி நிர்வாகம் இருந்தது. இந்நிலையில் காயம் காரணமாக விலகி உள்ள ஜேமிசனுக்கு பதிலாக தென்னாபிரிக்காவை சேர்ந்த சிசண்டா மகலா சேர்க்கப்பட்டுள்ளார்.





## இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ் ரைபகினா சம்பியன் வென்றார்!

சன்பிரான்சிஸ்கோ, மார்ச் 21

கஜகஸ்தானின் ரைபகினா இந்தியன் வெல்ஸ் ரென்னிஸ் தொடரின் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார்.

அமெரிக்காவின் இந்தியன்வெல்ஸ் சர்வதேச ரென்னிஸ் தொடர் கலிபோர்னியாவில் நடந்தது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதி போட்டியில் கஜகஸ்தான் வீராங்கனை எலினா ரைபகினா, பெலாரஸ் வீராங்கனை அரினா சபலென்காவுடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் ரைபகினா 7-6 (13-11), 6-4 என்ற செற் கணக்கில் சபலென்காவை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். இதன் மூலம் முதல் முறையாக எலினா ரைபகினா இந்தியன்வெல்ஸ் சம்பியன் பட்டத்தை வென்றார். மேலும், கஜகஸ்தானில் இருந்து இந்தியன்வெல்ஸ் பட்டத்தை முதன்முறையாக வென்றவர் என்ற பெருமையையும் பெற்றார். (ஐ)

# ஜனாதிபதி கதிரையில் அமர யாருக்குமே தகுதி கிடையாது!

## கூறுகின்றார் அனுரகுமார



கொழும்பு, மார்ச் 21

**ஜனாதிபதி கதிரையில் அமரும் அளவு தகுதியான தலைவர்கள் நாட்டில் இல்லை என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி கதிரையில் அமரும் அளவு எமது நாட்டின் தலைவர்கள் வளர்ச்சியடையவில்லை. எமது நாட்டின் தலைவர்களுக்கு ஜனாதிபதி கதிரை என்பது பொருத்தமானதல்ல.

அந்தக் கதிரையின் பெறுமதி என்பது அதிகம்.

ஜனாதிபதி கதிரையில் அமர்ந் தால் ஆணை பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மட் டுமே மாற்ற முடியாது. ஏனைய அனைத்து நடவடிக்கைகளை யும் மேற்கொள்ள முடியும் என்று முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன கருத்தொன்றை வெளியிட்டிருந்தார்.

பொதுமன்னிப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் பொதுமன்னிப்பு வழங்கக் கூடியளவில் எமது நாட்டின் தலைவர்கள் தங்களை வளர்த்துக்கொள்ள வில்லை.

பொதுமன்னிப்பு வழங்கும் அதிகாரம் என்பது எமது நாட்டின் தலைவர்களுக்கு பொருத்தமானது கிடையாது.

அந்தளவு அவர்கள் தங்களை அபிவிருத்தி செய்துகொள்ளவில்லை.

சகலரையும் சமமாக மதிக்கும் சட்டத்துறை அவசியமானதாகும்.

எனவே, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கிவிட்டு புதிய சட்டத்திட்டங்களுக்குள் எமது நாட்டை கொண்டுவரவேண்டியது அவசியமாகும்

தமிழர், சிங்களவர், முஸ்லிம்களுக்கு மத்தியில் ஐக்கியம் கட்டியெழுப்பப்படும் நாடே அவசியமாகும்.

உலக நாடுகள் ஏற்றுக் கொண்ட ஒரு அரசாங்கம் அவசியமாகின்றது. எமது நாட்டின் அரசாங்கத்தை எந்த நாடுகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. உலக நாடுகளுக்கு மத்தியில் எமது அரசாங்கம் கறைபடிந்த அரசாங்கமாக காணப்படுகின்றது- என்றார்.

(அ-கே)

# பல்கலை. ஆசிரியர்களின் புறக்கணிப்பு தொடர்கிறது

## கற்றல் நடவடிக்கைகள் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 21

பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஆரம்பித்துள்ள பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்று திங்கட்கிழமை 12ஆவது நாளாக தொடர்ந்த நிலையில் பல்கலைக்கழக கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கும் வரை வேலை நிறுத்த போராட்டம் தொடரும் என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கை உள்ளிட்ட பல விடயங்களை முன்னிறுத்தி மின்சாரம் மற்றும் நீர் விநியோக தொழிற்சங்கங்களின் போராட்டமும் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது.

தமது கோரிக்கைகள் தொடர்பாக இந்த வாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாட உள்ளதாகவும் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

(அ)

# 3 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்

கொழும்பு, மார்ச் 21

தற்போது நிலவும் கடும் மழை காரணமாக மூன்று மாவட்டங்களில் மண் சரிவு அபாயம் காணப்படுவதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பதுளை, காலி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் இந்த அபாயம் ஏற்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் பேச்சாளர் தெரிவித்தார்.

குறித்த பிரதேசங்களின் மலை மற்றும் சரிவான பகுதிகளில் வாழும் மக்கள் மண்சரிவு தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# விமான பயணச்சீட்டு விலையை குறைக்க அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 21

விமான பயணச்சீட்டுக்களின் விலையை குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பயணச்சீட்டு விற்பனை நிறுவனங்களுடன் கலந்துரையாடிய பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, மத்தள விமான நிலையத்தின் செயற்பாடுகளை விமான நிறுவனத்திடம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

(அ)

## ஐ.தே.கவுக்கு புதிய யாப்பா?

# பொது மக்களிடமிருந்து யோசனை பெற திட்டம்

கொழும்பு, மார்ச் 21

ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய யாப்பொன்றை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளைப் பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கையெடுக்கப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கான புதிய யாப்பை சட்டமூலமாக்குவதற்கு கட்சியின் நிறைவேற்றுச் சபையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த குழுவின் பரிந்துரைக்கமையவே புதிய யாப்புக்கான பொதுமக்களின் கருத்துக்களும் யோசனைகளும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.


மேற்படி குழுவின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி திலக் மாரப்பனவும் செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி நிஸங்க நாணயக்காரவும் ஏனைய அங்கத்தவர்களாக ஜனாதிபதி சட்டத்தரணிகளான தயா பெல்பொல மற்றும் ரோலண்ட் பெரேரா ஆகியோரும் செயற்படுகின்றனர்.

அதற்கிணங்க புதிய யாப்பு சட்டமூலத்தை தயாரிப்பதற்காக கருத்துக்கள் மற்றும் யோசனைகளைப் பெற்றுத்தருமாறு கட்சி அனைத்து செயற்குழுவின் அங்கத்தவர்களுக்கும் மாவட்டத் தலைவர்கள் மற்றும் அதிகாரம் கொண்ட பிரதிநிதிகளுக்கும் கட்சியின் அமைப்பாளர்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளது. புதிய யாப்பு தயாரிப்பை தொடர்ந்து கருத்துக்கள் மற்றும் யோசனைகளை மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்பதாக கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவின் சட்டப் பிரிவில் ஒப்படைக்குமாறும் குழுவின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸங்க நாணயக்கார தெரிவித்தார்.

(அ)

# நீதித்துறை சுதந்திரத்தை பாதுகாக்க நிறைவேற்றதிகாரத்தை எதிர்ப்போம்

## சட்டத்தரணிகள் சங்கம் அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 21

நிறைவேற்று அதிகாரத்தின் அழுத்தத்திலிருந்து நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் போராட்டத்தை நடத்த உள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

நீதிமன்றத் தீர்ப்புகளை முறையாகப் புறக்கணிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தே சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் இவ்வாறு கூறினார்.

நிர்வாகிகள் நீதிமன்ற உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியத் தயாராக இல்லை என்பதையும், தீர்ப்புகளை முறையாகப் புறக்கணிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை அவதானிக்க முடிவதாகவும் குறிப்பிட்டார்.


ஆகவே நீதிபதிகளை அழுத்தத்துக்கு உள்ளாக்கும் நிறைவேற்று அதிகாரத்தை அனுமதிக்கக்கூடாது என சாலிய பீரிஸ் வலியுறுத்தினார்.

அத்தோடு நீதித்துறைக்கு அழுத்தம் கொடுப்பதற்கு பாராளுமன்றத்தை பயன்படுத்துவது ஆரோக்கியமற்ற செயற்பாடு எனவும் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

(அ)

# பண்டாரவளை-பூனாகலையில் மண் சரிவில் 40 வீடுகள் சேதம்!

## எழுவர் காயம்



கொழும்பு, மார்ச் 21

பண்டாரவளை-பூனாகலை கபரகல தோட்டத்தில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை அடை மழை பெய்துள்ளதால் கபரகலை தோட்ட வைத்திய சாலை அமைந்துள்ள பகுதியிலேயே மண் சரிவு அனர்த்தம் இடம்பெற்றது.

இதன் காரணமாக பண்டாரவளை-பூனாகலை கபரகல தோட்டத்தில் சுமார் 40 வீடுகள் சேதமடைந்தன.

அத்துடன், எழுவர் காயமடைந்துள்ளதோடு உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காயமடைந்த எழுவரில் இருவர் கொஸ்லந்த வைத்தியசாலையிலும், இருவர் தியதலாவ வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் மண் சரிவால் பாதிக்கப்பட்டுள்ள 62 குடும்பங்களைச் சேர்ந்த 220 இற்கும் மேற்பட்டோர் பூனாகலை இலக்கம் 3 தமிழ் வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

குறித்த மண் சரிவால் ஏற்பட்ட மீட்புப் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டதோடு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு சென்று ஆய்வுகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## சிறுமி மீது...

ஒருவர் கூட்டு வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டார் என்று நேற்று முன்தினம் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதன்போது, பாதிக்கப்பட்ட சிறுமியை பொலிஸார் மருத்துவமனையில் சேர்ப்பிக்கவில்லை. தாயாரை சேர்ப்பிக்குமாறு கூறியிருந்தனர். இந்த நிலையில், இரவு 8 மணி வரை சிறுமி மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்படவில்லை.

இது தொடர்பாக அறிந்த மனித உரிமைகள் ஆணைக்குழு சிறுமியை உடனடியாக மருத்துவமனையில் சேர்ப்பிக்குமாறு அச்சுவேலி பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டது.

இதைத் தொடர்ந்தே அவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இதைத் தொடர்ந்து சட்ட மருத்துவ வல்லுநரின் பரிசோதனையில் சிறுமி போதையால் பாதிக்கப்பட்டமையும், வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டமையும் தெரிய வந்தது.

இதனிடையே, அச்சுவேலி பொலிஸார் நடத்திய விசாரணையில் இந்தச் சம்பவம் தொடர்பில் 22, 31 வயதான இருவர் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இருவரும் நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப் பட்டனர். இருவரையும் நீதிவான் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட் டுள்ளார். (ஐ)

## கொக்குத்தொடு...

தங் களின் காணிகளை அபகரிக்க முனைவது சிங்களமயமாக்கும் நோக்கமே என்றும் சாடியுள்ளனர்.

மேலும், தமிழ் மக்களுக்கு சொந்தமான ஆயிரத்து 500 ஏக்கர் நிலத்துக்கும் மேற்பட்ட வயல்களில் மேட்டுக் காணிகளை குறிவைத்தே இவ்வாறு எல்லைக் கற்கள் நாட்டப்பட்டுள்ளன என்றும் தமிழ் மக்கள் தெரிவித்தனர்.

இதே போன்றதொரு செயல்பாடு கடந்த வருட இறுதியிலும் ஏற்பட்டது. அந்தச் சமயம், உரிய நில அளவைத் திணைக்களம் மற்றும், வெலி ஓயா பகுதி நிலஅளவைத் திணைக்களத்தினருடன் பேசிய அப்பகுதி மக்களும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் அந்த எல்லைக் கற்களை அகற்றியிருந்தனர்.

அத்துடன், இவ்வாறான எல்லைக்கல் நாட்டுவதாக இருந்தால் அது குறித்து உரியவர்களுக்கும் கமக்கார அமைப்பு, மாவட்ட செயலர், பிரதேச செயலர் ஆகியோருக்கு உரிய அறிவித்தல் விடுக்கப்படும் என்று எல்லைக்கல் நாட்டிய நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் உறுதியளித்தனர். இந்த நிலையிலேயே, மீண்டும் சத்தம்சந்தடியின்றி மீண்டும் எல்லைக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன என்றும் கூறினர்.

இந்த விடயம் குறித்து கொக்குத்தொடுவாய் கமக்கார அமைப்பினர் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரனுக்கு தெரியப்படுத்தினர். இதையடுத்து அவர் நேற்று அந்த இடங்களைப் பார்வையிட்டார். அத்துடன், இது குறித்து உரியவர்களின் கவனத்துக்கு கொண்டு வருவதாகவும் உறுதியளித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் ஆகியோரின் கவனத்துக்கும் கொண்டு வரவுள்ளதாக கொக்குத்தொடுவாய் மக்கள் தெரிவித்தனர்.

இதேசமயம், தமிழர் தாயகமான முல்லைத்தீவில் மேலும், தமிழ் மக்களின் பூர்வீக காணிகளை வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், வனவள திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை ஆகியன தொடர்ச்சியாக இவ்வாறான ஆக்கிரமிப்பு பணியில் ஈடுபட்டுள்ளன என்றும் மக்கள் கூறினர். (ஐ)

## கொலையாளி...

பரிசீலித்த நீதியரசர்களின் அமர்வு பிரதிவாதிகளின் மேன்முறையீட்டு மனுக்களை எதிர்வரும் ஒக்ரோபர் 6ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கத் திகதி நிர்ணயித்தது.

இந்த மேன்முறையீடுகள் கோரப்பட்ட நேரத்தில், சிறையில் இருந்த வழக்கில் முக்கிய குற்றவாளியான "சுவிஸ் குமார்" பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் சிறை அதிகாரிகளால் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

புங்குடுதீவில் கடந்த 2015 மே 14 ஆம் திகதி பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியா என்ற மாணவி கூட்டு வன்புணர்வின் பின் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இது தொடர்பாக 9 பேர் சந்தேகநபர்களாக கைது செய்யப்பட்டு வழக்கு நடந்தது. இந்த வழக்கில், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் 2017ஆம் ஆண்டு ஏழு பேரை குற்றவாளிகளாக இனங்கண்டு மரண தண்டனை விதித்தது.

இப்போது இந்த வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட விதம் சட்டத்துக்கு எதிரானது என்றும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்களை குற்றங்களில் இருந்து விடுவிக்க உத்தரவிட வேண்டும் எனவும் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## டொலருக்கு...

ஒன்றுக்கு நிகரான ரூபாயின் பெறு மதி படிப்படியாக அதிகரித்து செல்லு மென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதற்கு அவசியமான கடன் வழங்குநர்களின் நிதியியல் உத்தரவாதம், பொருளாதார மறுசீரமைப்பு உள்ளிட்ட அனைத்து நிபந்தனைகளும் இலங்கையால் பூர்த்திசெய்யப்பட்டிருக்கும் நிலையில், இந்த செயல்திட்டத்துக்கான சர்வதேச நாணய நிதியப் பணிப்பாளர் சபையின் அனுமதி குறித்த இறுதி அறிவிப்பு இன்று செவ்வாய்க்கிழமை (இலங்கை நேரப்படி) வெளியாகவுள்ளது.

இது இவ்வாறிருக்க கடந்த ஒரு வார காலமாக அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான ரூபாயின் பெறுமதி படிப்பபாக அதிகரித்துச்சென்றதுடன், மீண்டும் கடந்தவார இறுதியில் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்தது.

இந்த நிலையில், கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்துடனான இறுதி இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னர், அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி மீண்டும் படிப்படியாக அதிகரித்து செல்லும் - என்றார்.

மேலும், அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதியை 185 - 200இற்குள் பேணமுடியும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை கடந்த வாரம் அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி தளம்பல் நிலையில் காணப்பட்டதாக சுட்டிக்காட்டியுள்ள இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, இருப்பினும் தற்போது டொலர் நெருக்கடிக்குத் தீர்வு காணப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று சர்வதேச நாணய நிதியத்துடனான இறுதி இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னர் இலங்கை தொடர்பில் முதலீட்டாளர்களின் நம்பிக்கை மேலோங்கும் என்றும், அதனூடாகப் பெருமளவான முதலீடுகளை ஈர்த்துக்கொள்ளமுடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (ஐ)

# உள்ளூராட்சி தேர்தலை விரைவாக நடத்துங்கள்

## சிறீ லங்கா பொதுஜன பெரமுன

கொழும்பு, மார்ச் 21

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுமாறு சிறீ லங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதியிடம் வலியுறுத்தவில்லை. தேர்தலை விரைவாக நடத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளோம். உள்ளூராட்சி மன்றங்கள் அரச அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுவது ஜனநாயகத்துக்கு முரணானது என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் நிறைவடைந்ததை தொடர்ந்து உள்ளூராட்சி மன்ற நிர்வாகம் மாநகர சபை ஆணையாளர்களிடமும், பிரதேச சபை செயலாளர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள்தான் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

உள்ளூராட்சி மன்ற நிர்வாகம் மக்கள் பிரதிநிதிகள் அல்லாத தரப்பினரால் முன்னெடுக்கப்படுவது ஜனநாயகத்துக்கு முரணானது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுமாறு ஜனாதிபதியிடம் பொதுஜன பெரமுன ஒருபோதும் வலியுறுத்தவில்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வெகுவிரைவாக நடத்தப்பட வேண்டும் என ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம். கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்கு தயாராக உள்ளோம். சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய் என்பதை நாட்டு மக்கள் அறிந்து கொண்டுள்ளார்கள்.

தேர்தல் இடம்பெற்றால் சிறீ லங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெறும். தேர்தலை பிற்போடும் நோக்கம் எமக்கு கிடையாது. யாருக்கு ஆட்சியதிகாரத்தை ஒப்படைக்க வேண்டும் என்பதை நாட்டு மக்கள் தீர்மானிப்பார்கள் - என்றார். (ஐ)

## 7 பில். டொலர்...

நாணய நிதியத்தின் செயல்குழுவால் எமது திட்டத்துக்கு அனுமதி வழங்கியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறோம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நீட்டிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் இலங்கையின் வேலைத் திட்டத்துக்கு சர்வதேச நாணய நிதியத்தின் செயல்குழு அங்கீகரித்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம், சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் பலதரப்பு நிறுவனங்களிடமிருந்து 7 பில்லியன் டொலர் வரையிலான நிதியுதவியை இலங்கை பெற இந்தத் திட்டம் உதவும்.

அரசாங்கத்தின் பல் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும், கடன் நிலைத்தன்மையை அடையவும் அரசாங்கம் முயற்சித்து வரும் இலங்கைக்கு இது ஒரு வரலாற்று மைல்கல்லாக அமைகிறது.

இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளியிட்ட ஊடக அறிவிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில், சர்வதேச நாணய நிதியம், சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் பல்தரப்பு அமைப்புகளிடமிருந்து 7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையிலான நிதியுதவியை இலங்கைக்கு பெறும் வகையில் சர்வதேச நாணய நிதியத்தின் செயற்குழுவால் எமது திட்டத்திற்கு அனுமதி வழங்கியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

ஆரம்பத்திலிருந்தே, நிதி நிறுவனங்களுடனும் எங்கள் கடன் வழங்குபவர்களுடனும் நாங்கள் நடத்திய அனைத்து பேச்சுகளும் முழு வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்கப்பட்டன.

தூர நோக்கான பொருளாதாரக் கொள்கை மற்றும் எமது இலட்சிய சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் மூலம் பொருளாதாரம் நீண்ட கால மீட்சியை எதிர்பார்க்கும். இந்த நேரத்தில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் நமது சர்வதேச பங்காளிகள் அளித்த ஆதரவிற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் - என்றுள்ளது. (ஐ)

## உணவு ...

இருப்பு, விநியோக நடவடிக்கைகளில் எந்தப் பாதிப்பும் இருக்கவில்லை என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

பாடசாலை ஊட்டச்சத்து திட்டம், உணவு விநியோகம் மூலமாக 34 இலட்சம் மக்களுக்கு உலக உணவுத் திட்டம் உதவ முன்வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வியாஸ்காந்து...

இதில், யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளம் பந்துவீச்சாளரான விஜயகாந்த் வியாஸ்காந்துக்கு ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வலைபந்து பந்துவீச்சாளராக சந்தர்ப்பம் வழங்கியுள்ளது. இதற்காக அவர் விரைவில் இந்தியா பயணமாகவுள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த வியாஸ்காந்த் கடந்த இரு வருடங்களாக இலங்கையின் பிரபல தொடரான எல். பி. எல். இருபது - 20 தொடரில் யாழ்ப்பாணம் கிங்ஸ் அணிக்காக விளையாடி வந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

## தோல்வியில்...

எதிராகப் போராடுவது தொடர்பாக நாளை புதன்கிழமை தீர்மானிக்கப்படும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்ற சபையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் கலைத்திருந்தார். இதற்கு ஆசிரியர் தொழில் சங்கங்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன.

இந்த நிலையில், இது தொடர்பாக கல்வி அமைச்சுடன் ஆசிரியர் தொழில் சங்கங்கள் பேச்சு நடத்தின. இந்தப் பேச்சு தோல்வியில் முடிவடைந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்த நிலையிலேயே அரசாங்கத்தின் திடீர் முடிவுக்கு எதிராகப் போராடுவதற்காக நாளை புதன்கிழமை கோட்டை ரயில் நிலையத்தில் ஆசிரியர் தொழில் சங்கங்கள் கூடி முடிவுகளை எடுக்கவுள்ளன என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# டொலரை விட ரூபாய் உயர்ந்தால் இலங்கைமீது அமெ. குண்டு வீசும்!

## சுனில் ஹந்துன்நெத்தி எச்சரிக்கை



கொழும்பு, மார்ச் 21

அமெரிக்க டொலரை விட இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்தால் அமெரிக்கா எம் மீது குண்டுகளை வீசும் என தேசிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி எச்சரித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமெரிக்க டொலரை விட இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்தால் அமெரிக்கா எம் மீது குண்டுகளை வீசும்.

பொருட்களில் விலை குறைவடைவதாகக் கூறினால் கடந்த வருடம் காணப்பட்ட விலைக்கு குறைவடைந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி குறையவில்லை.

முன்னர் 33 ரூபாவிற்கு காணப்பட்ட சவர்க்காரத்தின் இன்றைய விலையை ஒப்பிட்டு பார்க்கையில் விலை குறைந்துள்ளதாக கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியுமா?-என்றார். (அ)

# திட்டமிட்டபடி ஏப்.25 தேர்தல் நடைபெறாது

## கூறுகிறார் மகிந்த தேசப்பிரிய



கொழும்பு, மார்ச் 21

திட்டமிட்டபடி ஏப்ரல் 25ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறாது என தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் காலம் முடிவடைந்த பின்னரும் பதவிக்காலத்தை நீடிப்பது அரசியலமைப்புக்கு முரணானது என்றும் அவர் கூறினார்.

ஆகவே தற்போது குறித்த தேர்தலை நடத்தாதிருப்பதை காட்டிலும் இது பாரிய குற்றம் என்றும் மகிந்த தேசப்பிரிய குறிப்பிட்டார். எவ்வாறாயினும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத் தப படவேண்டும் என மகிந்த தேசப்பிரிய மீண்டும் வலியுறுத்தினார். (அ)

# எரிபொருள், மின்சார கட்டணங்கள் கணிசமாக குறைக்கப்படவேண்டும்

## சம்பிக்க ரணவக்க கோரிக்கை



கொழும்பு, மார்ச் 21

டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளதால் எரிபொருள் மற்றும் மின் கட்டணங்களை கணிசமான விகிதத்தில் குறைக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் தற்போது பாரிய இலாபத்தை ஈட்டுகின்றன என்றும் எரிபொருள் மற்றும் நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கான கேள்வி நடைமுறையில் ஊழல் இருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இலங்கை கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதாலும், இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் மற்றும் எரிபொருள் நுகர்வு குறைக்கப்பட்டதாலும் அமெரிக்க டொலருக்கான தேவை குறைந்துள்ளது என்றும் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஆகவே வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்ட கடன்களை செலுத்த ஆரம்பித்தால் அல்லது இறக்குமதியை அனுமதித்தால் டொலரின் மதிப்பு அதிகரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# மீண்டும் வரும் ஈ.பி.ஆர்.எல்.எவ்

கொழும்பு, மார்ச் 21

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி கட்சி தனது பெயரை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்) என மாற்றிக்கொள்ளவுள்ளது.

தமிழீழ இலட்சியத்துடன் தமிழ் இளைஞர்கள் மத்தியில் தோன்றிய பல இயக்கங்களில் ஈ.பி.ஆர்.எல். எவ் அமைப்பும் ஒன்று. ஆயுத போராட்டத்திலிருந்து ஜனநாயக அரசியல் போராட்ட வழிக்கு திரும்பிய பின்னர், பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாக தேர்தலில் போட்டியிட்டு வருகிறது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளில் ஒன்றாக இருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ், பின்னர் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியிருந்தது.

சில வருடங்களின் முன்னர், விக்னேஸ்வரன் உள்ளிட்ட தரப்புக்களுடன் கூட்டணியமைத்து தேர்தலை எதிர்கொண்டது. இந்த கூட்டணிக்காக ஈ.பி.ஆர்.எல். எவ் இன் பெயர், சின்னம் மாற்றப்பட்டிருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் பெயர் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியென மாற்றப்பட்டு, சின்னமும் மாற்றப்பட்டது.

தற்போது, அந்த கூட்டணியில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கிறது. இந்த நிலையில், கட்சியின் பெயரை ஈ.பி.ஆர்.எல்.எவ் என மாற்றி, சின்னத்தையும் மாற்ற தீர்மானிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி கட்சியின் மத்திய குழுவை கூட்டி தீர்மானம் நிறைவேற்றிய பின்னர், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் எனக் கூறப்படுகின்றது. (அ)

# செல்வச்சந்நிதி - கதிர்காம பாதயாத்திரை மே 27இல்!

அம்பாறை, மார்ச் 21

வரலாற்று பிரசித்தி பெற்ற செல்வச்சந்நிதி கதிர்காமம் நீண்ட பாதயாத்திரை எதிர்வரும் மே மாதம் 27 ஆம் தேதி ஆரம்பமாக இருக்கிறது என்று பாதயாத்திரை குழுவின் தலைவர் ஜெயாவேல்சாமி தெரிவித்தார்.

சந்நிதி கதிர்காமம் பாதயாத்திரைக் குழுவின் ஏற்பாட்டில் 22ஆவது வருடமாக இப் பாதயாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது . இம்முறை பாதயாத்திரையில் கலந்துகொள்வோர் கட்டாயம் சமய ஆசார முறைப்படி கலந்து கொள்ள வேண்டும் .

21 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் வேஷ்டியோடும் 45 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் காவி சாறியுடனும் கலந்து கொள்ள வேண்டும். செல்லும் வழியில் உள்ள ஆலயங்களில் பஜனை மற்றும் சிரமதானத்தில் பங்கு கொள்ளவேண்டும்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் 45 வயதுக்கு உட்பட்ட பெண்கள் எக்காரணம் கொண்டும் இணைத்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என்றும் யாராவது சமய ஆசார முறைக்கு மாறான நடத்தையில் ஈடுபட்டால் இடைநடுவில் நிறுத்தப்படுவார்கள் என்று ஜெயாவேல்சாமி மேலும் தெரிவித்தார். (அ)

# விமான பயண சீட்டு விலை மேலும் குறைவடையும்!

கொழும்பு, மார்ச் 21

ரூபாய்க்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதி குறையும் விகிதத்துக்கு ஏற்ப விமானப் பயணச்சீட்டுகளின் விலைகளைக் குறைக்குமாறு இலங்கையிலுள்ள விமான நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் கேட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை,விமானப் பயணச்சீட்டுகளின் விலை ஏற்கனவே சுமார் 20 சத வீதம் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்காலத்தில் விமானப் பயணச்சீட்டுகளின் விலை மேலும் குறைக்கப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

# மகிந்தவை மீண்டும் பிரதமராக்குவோம்!

## மொட்டுக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

மக்கள் ஆதரவு மூலமே மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக்குவோம் என்று பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மகிந்த ராஜபக்சவைப் பிரதமராக்கவேண்டுமென்றால் அதனை எம்மால் இலகுவில் செய்துவிட முடியும்.

ஆனால், அவ்வாறான எந்தவொரு முயற்சியும் தற்போதுஇடம்பெறவில்லை. தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்த்தன எம்முடன் ஒத்துழைப்புடன் செயற்படுகின்றார்.

அவருடன் எமக்கு எவ்வித பிரச்னையும் இல்லை.

ஜனாதிபதி, பிரதமர் பதவி ஆசையில் திரியும் ஒரு சிலரே இப்படியான வதந்திகளைப் பரப்பி வருகின்றனர். மக்கள் ஆதரவு மூலமே மகிந்தவைப் பிரதமராக்குவோம் - என்றார். (அ)

# அரை சொகுசு பஸ் சேவை அடுத்த மாதம் முதல் ரத்து

கொழும்பு, மார்ச் 21

அடுத்த மாதம் முதல் அரை சொகுசு பஸ் சேவைகள் முற்றாக நிறுத்தப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ்களுக்கும் வழக்கமான பஸ்களுக்கும் வித்தியாசம் இல்லை என்பதை அவதானித்ததால் சம்பந்தப்பட்ட பஸ் சேவை இரத்து செய்யப்பட்டுள்ளது.

எனினும் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# பள்ளத்தில் வீழ்ந்தது கார் ஆசிரியர் ஸ்தலத்தில் பலி!

கொழும்பு, மார்ச் 21

பசறை 13 ஆம் கட்டை பகுதியில் கார் ஒன்று சுமார் 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 7.20 அளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான 39 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார்.

ஹொப்டன் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆசிரியராக கடமையாற்றும் குறித்த நபர் நேற்று காலை பாடசாலைக்குச் செல்ல தயாராகி தனது காரை வீட்டிலிருந்து வெளியே செலுத்தியவேளையில், அது அருகிலிருந்த பள்ளத்தின் ஊடாக பசறை-பிபிலை பிரதான வீதியில் விழுந்ததில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த ஆசிரியர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என விசாரணைகளில் தெரியவந்தது.

உயிரிழந்தவரின் சடலம் பசறை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.